தாள் ஆளர் ம. உ. க. பஞ்சநாதன். பதிவு எண் 2044

உ

தமிழர்

ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு.

தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்குரிய
எல்லா வளர்ச்சித்துறைகளையும் விளக்குவது.

மலர் க. } குரோதன, பங்குனி. 1926 March—April { இதழ் கஉ

அடங்கல்.

எண்.	பொருள்.	பக்கம்.
1	கட்டுரை யளித்த அன்பர்கள்	i
2	முதல் மலர் அட்டவணை	ii
3	திருஞானசம்பந்தர்போற்றித்திருவகவல்	533
4	தமிழ் அணங்கு தம்மக்களுக்கு அறிவுறுத்தல்	537
5	தமிழ் மக்கள் கடமை	539
6	தமிழ் மொழியும், தமிழர் கடமையும்	541
7	திருமுருகாற்றுப்படை	546
8	வரைநூல் (தனித் தமிழ்ச்சொற்கள்)	549
9	வாழ்க்கையின் வெற்றியும் தோல்வியும்	553
10	சமயம்	557
11	முருகர் திருவிளையாடல்கள்	563
12	கௌரி சங்கரன்	565
13	நன்றிகூறல்	573
14	தமிழ்ச் சர்வகலாசாலை	574
15	செய்திக்கோத்து	575
16	பரிதிவானவன் போற்றிப்பரவல்	576
17	தமிழ்வார்த்தைச் சதுரம் விடை	577
18	ஒரு பவுன் இனும்!	580

25, மலைவாசல், தெப்பக்குளம், (போஸ்டு), திருச்சிராப்பள்ளி.

" தமிழர் "

பத்திரிகைகள் கிடைக்கும் இடங்கள்:—

1. இரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள எல்லா ஹிக்கின்பாதம் புத்தக சாலைகள்.
2. சென்னை:-சோல்டன் கம்பேனி,
   193, திருவல்லிக்கேணி ஹை ரோட்,
3. சென்னை நியூஸ் ஏஜென்சி, எஸ்பிளநேட்,
   ஹை கோர்ட்டுக்குச் சமீபம்.
4. தென்னிந்தியா நலவுரிமைக் கூட்டுறவு சங்கம், கோயமுத்தூர்.
5. உயர்திரு. தயானந்த சுவாமிகள், மனோவசிய சங்கம் தலைவர்,
   திருப்பரங்குன்றம்பாதை, மதுரை.
6. திரு T. S. கணபதி பிள்ளையவர்கள், காரியதரிசி,
   தியாகராய நிலயம், சேலம்.
7. ,, தீட்சதர் புத்தகசாலை, கும்பகோணம்.
8. ,, தேவராஜுலு நாயுடுகாரு, போஸ்டாபீசு, தஞ்சாவூர்.
9. ,, N, சிவகுருநாத பிள்ளையவர்கள்,
   சைவப்பிரகாசம் அச்சுக்கூடம், தூத்துக்குடி
10. ,, S கோபால், இறக்குமதி, ஏற்றுமதி வியாபாரம்,
    178, செலிஜி ரோட்டு, சிங்கப்பூர்,
11. ,, பெடரல் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி,
    3, 5, ராட்ஜர் மார்க்கட்டு தெரு, கோலாலம்பூர்,
12. ஷை............ஐபோ
13. ஷை.........சிங்கப்பூர்,
14. ஷை.........பினாங்கு

    ஷை கம்பெனியின்கீழ் குறிப்பிட்ட இரயில்வே புத்தகசாலைகளிலும் கிடைக்கும்:—

15. மலாக்கா, செரம்பன், கிலாங்கு, தபாரோட்டு, டைப்பிங்கு, பாரிட் பந்தர், அலர்ஸ்டார் கெடா.
16. பிரிட்டிஷ் அமெரிக்கன் நியூஸ் கம்பெனி, புத்தகவியாபாரிகள், 6, பாட்டரிதெரு, சிங்கப்பூர் இன்னும் பிற இடங்களிலும் கிடைக்கும்.

மற்ற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

ஏஜண்டாக இருக்கப் பிரியப்படும் அன்பர்கள், அமைச்சர், " தமிழர் நிலையம் " **25**, மலைவாசல், தெப்பக்குளம், (போஸ்டு) திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற்கு எழுதவும்.

உ

தமிழர்.

திரிசிரபுரத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்
ஓர் இனிய தனித்தமிழ் திங்கள் வெளியீடு.

தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்குரிய
எல்லா வளர்ச்சித் துறைகளையும் விளக்குவது.

குரோதன ஆண்டு.
(1925-1926.)

தாள் ஆளர்:

ம. ஊ. க. பஞ்சரத்தினம் பிள்ளை,
25, காரோனேஷன் தோட்டக்கடை வரிசை,
தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி,

விலை ரூ. 3—0—0.

கட்டுரை அளித்த அன்பர்கள்.

1. பெருந்திரு பஞ்சாட்சரபுரம் வாலையானந்த சுவாமிகள்.
2. ,, கல்லல் மணிவாசக சரணாலய சுவாமிகள்.
3. ,, மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ., எல். டி.
4. ,, பா. வே. மாணிக்கம் நாயக்கர் அவர்கள், பி. இ., எம். சி.ஐ.
எம். ஐ. இ., சூப்பிரன்டெண்டிங் எஞ்சினீர்.,
5. ,, திவான்பகதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள்,
எம். ஆர். ஏ. எஸ்., எப். ஆர். ஏ. எஸ்., ஐ. எஸ். ஒ.
போலீஸ் டிப்டி கமிஷனரும்,
சென்னை ஷெரீப் ஆய் இருந்தவரும்.
6. ,, அமிர்தகவி அமிர்தனார் அவர்கள், தமிழ் ஆசிரியர்.
7. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், தமிழ் ஆசிரியர்.
8. ,, அ. இறையொளி, தமிழ் ஆசிரியர்.
9. ,, அமிர்தம் சுந்தரநாதம் பிள்ளையவர்கள்.
10. ,, தி. இலட்சுமண பிள்ளையவர்கள், பி. ஏ., எம். எல். சி.,
திருவனந்தபுரம்.
11. ,, தி. இராமலிங்கம் பிள்ளையவர்கள் எம், ஏ., திருவனந்தபுரம்
12. ,, அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்,
தமிழ்ப்புலவர், ஜலகண்டபுரம்.
13. ,, மு. நடேச முதலியார் அவர்கள், தமிழ் ஆசிரியர்.
14. ,, சி. வேதாசலம் பிள்ளை அவர்கள் பி. ஏ., பி. எல்., தஞ்சை.
15. ,, ஜி. சதாசிவம் பிள்ளை அவர்கள், நாகை நீலலோசினி
பத்திராதிபர்.
16. ,, காரைக்கால் அ. நாராயணசாமி நாயுடு,, ஸ்ரீபுநிதா. ஷை
17. ,, பஜனை முத்துச்சாமி பிள்ளை அவர்கள், முன்னீர்பள்ளம்.
18. ,, ம. பெரியசாமிப்பிள்ளை அவர்கள், தமிழ் ஆசிரியர்.
19. ,, பழனிக்குமாரன், ஆலமரத்துப்பட்டி.
20. ,, ஆ. தங்காம்பிள்ளை அவர்கள், திருநெறிக்கழகம், திருச்சி.
21. ,, வையாபுரி பிள்ளை அவர்கள், ஷை ஷை
22. ,, ம. உ. க. பஞ்சரத்தினம் பிள்ளை, (தாள் ஆளரும்),
உரிமையாளர், தமிழர் நிலையம், திருச்சிராப்பள்ளி.

உ

கட்டுரைகள் அட்டவணை.

அ.				பக்கம்.
அஞ்சற் கூலியைக்குறைத்தல்		...	...	90
அதிககாலம் உயிர் வாழ்வதெங்ஙனம் ?		...	...	89
அபிப்பிராயங்கள்	...	...		102, 161, 227, 262
அரசியார் அலக்சாண்டிரா அவர்களின் பிரிவுக்கிரங்கல்			...	389
அரும்பொருள் விளக்கம்	...	...	...	390, 423
அன்பர்பணி	...	...	...	225
அன்பும்—இறைபணியும்	...	...	...	263
ஆ.				
ஆங்கில வேலையாளர்களின் உழைப்பு		...	...	54
ஆங்கிலத்துக்கும் இந்தியாவுக்கும் ஆகாயவழிப் போக்குவரவு				88
திரு. பி. சி. ஆவுடையாப் பிள்ளையவர்கள் பிரிவுக்கிரங்கல்				427
இ.				
இந்திய வறுமை	...	...	...	165
இந்திய வரலாற்று ஆராய்ச்சிப் படுகுழிகள்		...	...	252
இந்திய பெண்மக்களின் கல்வி		...	...	453, 493
இந்து மகா சபை	...	...	...	90
இயற்கைக் குறிப்பறிதல்	...	...	...	399
இரங்கற்பா	...	...	...	463
இறந்தவர்களோடு பேசுதல்	...	...	...	45
உ.				
உடல் நலம்	...	...	...	43
உயர்தரக் கல்வி	...	...	...	315
உழவு	...	...	...	37
உழவுத்தொழிலின் வளர்ச்சி	...	...	...	333
உள்ளக்கிடக்கை உரைக்கும் பனுவல்		...	...	492
எ.				
எமது முறையீடு		...	...	396 (இ)
எறிபத்த நாயனார் புராணத்தத்துவார்த்தம்				277, 325, 365, 414

ஐ. பக்கம்.

"ஐ. சி. எஸ்." பட்டதாரிகள் 84

ஒ.

ஒரு பவுன் இனும்! 442, 449, 531, 577, 580
ஒலிக்குறிப்புச் சொற்கள் 8, 55
ஒற்றுமை நலம் 61

க.

கட்டுரையளித்த அன்பர்கள் i
கல்லல் மணிவாசக சரணாலய சுவாமிகள் விரிவுரை ... 213
கல்வியும்; ஆசிரியர்களும் 78, 119
கல்வி பயிற்றுமுறை புகட்டும் பள்ளிக்கூடம் ... 192, 254
கிள்ளி வளவன் 407, 501
குமரியாடல் 14
குரவர் மாணவர் குறிப்பு 285, 322, 356, 425, 495
கைத்தொழில் துண்டுத்துணுக்குகள் 46
கோச்செங்கட் சோழர் 25
கோப்பெருஞ் சோழர் (அல்லது) நட்பின் பெருமை ... 133, 170, 232
கோமதியம்மை துதி 309
கௌரி சங்கரன் (தமிழ் நாவல்) 293, 341, 381, 429, 469, 509, 565

ச.

சந்தா நேயர்களுக்கு முக்கிய அறிவிப்பு ... 485
சமயம் 477, 521, 557
சரவணபவர் பிரபாவம் அல்லது முருகர் திருவிளையாடல்கள் 481, 517, 563
சுந்தரமூர்த்தி சுவாமிகள் துதி 397
சூதாடுதலால் வருந்தீமை—தலைவெட்டிக் கிருஷ்ணன் கதை 18, 20
செந்தமிழ் நிந்தை சிவநிந்தையேயாம் 487
செந்தமிழ் நாட்டுச்சிறப்பு 157, 221
செப்பானின் முன்னேற்றம் 243
செய்திக்கொத்து ... 43, 92, 150, 209, 301, 467, 525, 575
செல்வமும், வறுமையும் 70
செல்வமென்பது சிந்தையின் நிறைவே 248
சென்னைக் கலைமாட சீர்திருத்தம் 186
சேமியா செய்தல்; தென்னையின் நோய் 89

த. பக்கம்.

தமிழ் மொழியும், தமிழர் கடமையும் 541
தமிழ்மக்கட் பாகுபாடு 113
தமிழ் மக்கள் கடமை 539
தமிழ்க் கலைமாடம் 127
தமிழ் அணங்கு தம்மக்களுக்கு அறிவுறுத்தல் ... 537
தமிழ் அமைச்சர் அவர்கள் "சர்" பட்டம் பெற்றமையை நினைவுகூற கூறிய வாழ்த்து. 428
தமிழ் சர்வ கலாசாலை 466
"தமிழர்" (பாரதியார்) 101
,, வாழ்த்துப்பா 261
,, வெளியீடு கிடைக்குமிடங்கள் 486
தமிழின் பெருமை 141
தற்காலத்திய தமிழ்ச்சுவடிகள் 353, 403
தாய்மொழி போற்றல் 239
தாளாளர் குறிப்புகள் 465
திருக்குற்றாலம் அருவி நீர்வீழ்ச்சி 3
திருக்காவிரியாறு 51
திருச்சிராப்பள்ளி தாயுமானவர் திருமலை (படம்) ... 1
திருசிராமலையும்; மௌனகுருசுவாமிகள தாயுமானவருக்கு உபதேசித்தலும் (படம்) 49
திருஞானசம்பந்தர் போற்றித்திருவகவல் 533
திருப்பாதிரிப்புலியூர்—திருவிழாச் சிறப்பு 147
திருமுருகாற்றுப்படை ... 181, 257, 272, 360, 505, 546
துண்டுத் துணுக்குகள் 202
தோடரும் அவர் மொழியும் 122

ந.

நமது நாட்டுக்கல்வி 229, 267
நமது முறை யீடு 447
நன்றி கூறலும் வேண்டுகோளும் 42, 573
நாட்டுப்புறங்களின் நிலைமை 109
நுண்பொருள் நூறு 421, 490
நூறு நூற்றாண்டுகட்குப்பின் ஓர் வியப்பான முன் தோற்றம் 378, 458
100—வயதில் கல்யாணம் 43

ப.	பக்கம்.
பட்டம்	61
பத்திரிகைகள்	49
பத்திரிகைகளும், சங்கங்களும்	302
பயிர்த்தொழில்	85
பரதகண்டமும், பன்னாட்டார் குழூஉம்	173
பரிதிவானவன் போற்றிப்பரவல்	576
பிழைக்கும் வழி	44
பெண்மக்களின் உடல் நலம்	5
பெரியம்மை	85
பொதுக்குறிப்புகள்	142, 205
ம.	
மகிழ்ச்சி	9, 57
மதிப்புரை	217, 305
முதற்குரவர் மொழிமுறை	349
முல்லை மணவினை (நாவல்)	40, 82
முன்னுரை	1
மேனாட்டில் விண்ணியங்கிகள் பெருக்கம்	86
யா.	
யானைத்தீவின் குகைகள் ...	115, 176, 235, 269, 320, 357, 405
வ.	
வரைநூல் (தனித்தமிழ்ச் சொற்கள்)	497, 549
வாணிகம் ...	31, 73, 135, 196, 259, 288, 337, 373, 410
வாழ்க்கையின் வெற்றியும் தோல்வியும்	553
வாழ்த்துப்பா	462, 488
வியாபாரக்கொத்து	48
விளம்பரம்	155, 219, 224, 308, 314, 394, 437, 452, 528
வேண்டுகோள்	396 (அ), 445

விளம்பர விவரம்.

கடையிலுள்ள சாமான்கள் தாமாகவே விலையாகா!

"விளம்பரம் செய்யாமற்போனால் எவ்வளவு நல்ல சரக்காக விருந்தபோதிலும் வியாபாரம் ஆகாது" என்று பெரிய ஆங்கில வியாபாரிகள் உறுதியாகச் சொல்லுகிறார்கள். விளம்பரம் செய்யக் கூடியது மாதச் சஞ்சிகையில்தான். ஏனென்றால் மாதச்சஞ்சிகைகளை மாதம் முழுவதும் படிப்பது மல்லாமல் ஒரு ஆண்டு கடைசியில் 12 இதழ்களும் பெற்ற பிறகேதான் ஒரு புத்தகமாகப் பயிண்டு செய்து எப்போதும் புத்தகசாலையில்வைத்து வாசிக்கக்கூடியது. மற்றவை அப்படியல்ல. ஆகவே, "தமிழர்" மாதச் சஞ்சிகையில் உங்கள் விளம்பரஞ் செய்யுங்கள். "தமிழர்" சஞ்சிகை இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்குகளிலும், வெளிநாடுகளிலுமுள்ள பெருத்த வியாபாரிகள் முதல் சிறிய வியாபாரிகளையும் நாடிச் செல்லுகிறது. இது வியாபாரத்தின் முன்னேற்றத்தை நாடி வெளிவருகிறது.

2. தமிழ் நாட்டில் உள்ள ஒவ்வொருவருடைய முன்னேற்றத்தையும் நாடிவருவதால் இந்தச் சஞ்சிகையைப் பெற்று மகிழ்ச்சியடையாதார் ஒருவருமே யிருக்கமாட்டார்கள்.

3. இந்த சஞ்சிகையில் விளம்பரம்செய்து அடையக்கூடிய பயனையும் விளம்பரம் செய்வதால் ஏற்படும் செலவையும் ஒப்பிட்டுப் பார்த்தால், செலவு ஒன்றுமேயில்லையென்று எண்ணலாம். இதைவிடக் குறைந்த சார்ஜுக்கு தமிழ்நாட்டிலுள்ள இதுபோன்ற எந்த சஞ்சிகையும் ஏற்றுக்கொள்ளாது.

4 அடுத்த 13–வது இதழ் இதைவிட அதிக விஷயங்களைக் கொண்டு 10,000 பேருக்குச் செல்லுவதால் காலந் தாழ்க்காது உடனே உங்கள் விளம்பரத்தை அமைச்சர், "தமிழர்" தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி என்ற விலாசத்திற்கு எழுதுக.

கண்டிராக்டு ஒப்பந்த விகிதம்:—

ஒரு வருடத்திற்கு மொத்தமாக அட்வான்சு தொகை கொடுப்பவர்களுக்கு 100க்கு $12\frac{1}{2}$ வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்பெறும்.

ஆறு மாதத்திற்கு மொத்தமாகக் கொடுப்பவர்களுக்கு 100க்கு $6\frac{1}{4}$ வீதம் கமிஷன் தள்ளிக் கொடுக்கப்பெறும்.

மூன்று மாதத்திற்குக் குறையாமல் கொடுத்தால் $3\frac{1}{8}\%$ வீதம் தள்ளிக் கொடுக்கப்பெறும்.

ஒரு முழுப்பக்கத்திற்கு 10—0—0, அரைப்பக்கம் 5-0-0, கால் பக்கம் 3-0-0, துண்டுத் துணுக்கு விளம்பரங்கள்:-ஒரு வார்த்தைக்கு 0—2—0 (இது 24 வார்த்தைகளுக்கு மேற்படல் ஆகாது)

5 ரூபாய்க்குக் குறைந்த விளம்பரப் பகுதிகளுக்குக் கமிஷன் கிடையாது. அமைச்சர், "தமிழர்" நிலையம், தெப்பக்குளம், திருச்சி.

பஞ்சாட்சரபுரம்

பெருந்திரு வாலையானந்த சுவாமிகள் பொது நலத்திற்காகவே பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க விலை உயர்ந்த சரக்குகளாலும் கிடைத்தற்கரிய அருமையான மூலிகைகளாலும் தமிழ் சித்த வைத்திய முறையிற் கூறியபடி ஒரு சிறிதும் பிசகாமல் செய்து பல ஆண்டுகள் உபயோகித்தது, அநுபவத்தில் மிகச்சிறந்த அருமையான மருந்துகள். இம் மருந்துகள் இலாபத்தை ஒரு சிறிதும் கவனிக்காது பரோபகாரத்தை முன்னிட்டே செய்யப்பட்டவை என்று நாம் அநுபவித் தறிந்ததனால் துணிந்து மிகவும் உறுதியாகக் கூறுகிறோம். சுவாமிகள் மருந்தின் அபார சக்தியை எம்மால் இவ்வளவென்று அளவிட்டுச் சொல்லமுடியாது. குழந்தைகள், பெண்மக்கள், ஆண்மக்கள், வயோதிகர் ஆகிய எல்லோருக்கும் ஏற்ற எல்லா மருந்துகளும் எம்மிடம் குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

2. **துயிர்த்தைலம்:**-விலை உயர்ந்த சரக்குகளால் செய்யப்பெற்றது. மூளைவேலை யுள்ளவர்களுக்கெல்லாம் மிகச்சிறந்தது. இதற்கு நிகரான தைலம் வேறு கிடையாது. பெரியபுட்டி, 2—8—0; சின்னது 1—4—0.

3. **நேத்திர ரஞ்சனி அரக்:**—கண்ணில் உண்டாகும் எவ்விதமான நோயையும் பஞ்சாகப் பறக்கடிக்கும் தன்மையுள்ளது. இதை உபயோகப்படுத்தினவர்கள் இழந்த கண்ணை மீண்டும் பெறுவார்களென்பதில் யாதும் ஐயமே யில்லை. பெரியபுட்டி, 1—0—0; சின்னது 0—12—0

4. **பற்பொடி:**—(தந்தரோக நிவாரணி) பற்பொடிகளெல்லாவற்றிலும் மிகச்சிறந்தது. இதை உபயோகப் படுத்தினவர்கள் பற்கள் முத்துப்போல் வயோதிகம் வரையில் உறுதியாய் யிருக்கும் என்பதை அநுபவத்தில் தெரிந்துகொள்வார்கள். ஒன்று 0—3—0; 1 டஜன் 2—0—0

5. குழந்தைகளுக்கு முக்கியமாகவும் அவசியமாகவும் வேண்டிய மருந்துகள்:—கோரோஜனை மாத்திரை, காக்கரட்டான் மாத்திரை, இராசசுகபேதி மாத்திரை, சுரமாத்திரை, பாலரக்ஷாமணி, ஆகியவும் பிறவும் எம்மிடம் கிடைக்கும்.

6. **வீரியவிர்த்தி மாத்திரை:**—இரத்தத்தைச் சுத்தி செய்து கொள்ள வேண்டுமா? நித்திரையில் உண்டாகும் இந்திரிய நஷ்டம் நிற்கவேண்டுமா? அஜீரணம், பித்த ஏப்பம் நீங்கவேண்டுமா? வீரியவிர்த்தி மாத்திரையை உபயோகிக்க அவைகளெல்லாம் நீங்கித் திடமுண்டாகி ஆண்புலிபோல் உலாவலாம். ஒரு புட்டி 1—8—0

7, **சர்வ ரணசஞ்சீவி:**—மேகரணங்கள், வெட்டுக்காயங்கள், புரைப்புண்கள் முதலியவைகளுக்கு வைரி யிதுவே. குதிரை, மாடு, ஆடு; முதலிய மிருகங்களுக்குண்டான இரணங்களை மாற்றுவதில் பிரசித்திபெற்றது,

8, **தேள்கடிமருந்து:**—அழுதவர்கள் அரை நிமிஷத்தில் சிரிப்பார்கள். தேனீக்கடி, பூரான் கடி, குளவிக்கடி. சிலந்திக்கடி முதலிய கடிகளும் உடனே நீங்கும், புட்டி 1-க்கு 0—8—0

கணபதி பண்டசாலை, 25, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சி.

எம்.எஸ். பூரணலிங்கம்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல்கள்

எந்த நூலையும் மொத்தமாக வாங்குபவர்களுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

ஐரோப்பிய யுத்தம்—படங்களுடன். திரு மு. சி. பூர்ணலிங்கம்பிள்ளை பி.ஏ.எல்.டி. யால் இயற்றப்பெற்றது. விலை அணா 8. அட்டை சேர்த்தது அணா 10. இதனை ஆக்கியோனை தமிழ் நாட்டில் அறியாதார் எவருமில ரென்றே கூறுவம், திங்கள்தோறும் சென்னையினின்று ஏழு ஆண்டுகளாக வெளிவந்த ஞானபோதினி என்னும் அருமையான நன்கு மதிக்கப்பெற்ற தூயதமிழ்த் தொகுதியை நடாத்தியவர் இவரேயாம். அன்றியும் இவர் பல கல்லூரிகளில் பல வாண்டுகளாக ஆங்கிலமொழியைப் புகட்டி வந்தனர். இந்நூலின் பொருளடக்கத்தால் நூல் பெருமை விளங்கும். ஆங்கிலமே கற்காத தமிழ் மக்களும் உலகப்பகுதியையும், உலகில் சிறந்து விளங்கும் மக்கட்டொகுதிகளின் செய்கைகளையும் எளிதில் படித்தறியலாம். பகுதிகள் 1, கண்டங்கள் 2, ஐரோப்பா கண்டம் 3 பிரிட்டிஷ் தீவுகள் 4, ஷை பேரரசு 5. ஜெர்மனி 6, ஷை குடியேறிய நாடுகள் 7, ஷை நாட்டின் வரலாறு 8, பெரிய யுத்தத்தின் காரணங்கள், யுத்த நிகழ்ச்சிகள் முதலியன 9, யுத்த முடிவு 10, ஆறு அரசுகள் 11, ஐரோப்பாவில் பெரிய ஆட்சியாளர்கள் 12 அரும்பதவிளக்கம். பத்துப்புத்தகம் வாங்குபவர்களுக்கு ஒரு புத்தகம் இனம். இப்புத்தகத்தைப் பெருமைப்படுத்திப் பேசாத தமிழ், ஆங்கில நாள் தாள்கள் கிடையா.

2. காமாட்சி—ஷை யாரியற்றியது விலை அணா 4. இது மோலியர் பிரஞ்சு நகை நாடகக்கதையை அடிப்படையாக உடையது. இன்பமளிக்கத்தக்கது. ஒருமணி நேரத்தில் நடித்துக் காட்டக்கூடியது. மனமயக்கங் கொண்ட மகளுக்கு மருந்து மணமென்பதே இதனுட் பொருளாம். காமாட்சிக்குற்றநோய் காமமென்று அறியாமல் பலஆயுள்வேதியர்கள் கூடி அவள்நோய்க்கு மருந்து இன்னதென்று காணமுடியாமல் தமக்குத் தோன்றியவாறு பேசி பணம் பறித்தலும் இயற்கையறிவுமிகுந்த ஒருவன் உண்மையைக் கண்டுபிடித்து நோயை எளிதில் அகற்றலும் இவற்றைப் பற்றிய காட்சிகள் படிக்கப்படிக்க இன்பம் விளைக்கும். பள்ளி மாணவர்கள் இதனைப்படித்து ஆண்டு விழாக்களில் நடித்துப் பலரும் மகிழுமாறு செய்யலாம்.

3. கதையும் கற்பனையும் ஷை விலை அணா 2. இதில் முப்பது கதைகளுள. இவை சிறுவர் சிறுமிகளுக்காக எழுதப்பட்டன. பள்ளிக்கூடங்களில் உரை நடை எழுத முயலும் மாணவர்களுக்கு இக்கதை மிகப் பயன்படும்.

4. பன்னிரு பெண்மணிகள் ஷை விலை அணா 6. ஜெகப்பிரியர் நாடகங்களில் திகழும் பன்னிருபெண்மணிகளைப்பற்றிய உரை நூலாம். பெண்கள் படிக்கத்தக்கது. ஒலிவியா, டெஸ்டிமோனு, கார்டெலியா, லீயர், மெக்பெத் பிராட்டி, காதரீனு, இமோஜன், ஹெர்மியோன், ரோஸலிண்டு, இஸபெல்லா, வயோலா, போர்ஷியா இவர்களே உரையிலுள்ள பெண்மணிகளாம். நூல்கள் பின்வரும் விலாசத்திற்கு எழுதினால் கிடைக்கும்.

கணபதி பண்டசாலை,
25, காரோனேஷன் தோட்டக்கடை வரிசை,
தெப்பக்குளம் (போஸ்டு), திருச்சி கோட்டை.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

திருஞானசம்பந்த சுவாமிகள்

நூற்றெட்டுப் போற்றித் திருவகவல்.

போரார் காழிப் பிள்ளையே போற்றி
சிவபாத விருதயர் செல்வா போற்றி
பகவதி பெற்ற பாலா போற்றி
அம்மை யப்பவென் றழுதாய் போற்றி
காரிகை பங்கனைக் கண்டாய் போற்றி
உமையருள் பாலை யுண்டாய் போற்றி
ஆண்டுமூன் றில்வினை யறுத்தாய் போற்றி
தோடுடை யவென்கவி சொற்றாய் போற்றி
தோணி யப்பரைத் துதித்தாய் போற்றி
ஞானசம் பந்தனென் னாமா போற்றி (௧0)

தந்தைதோ ளூர்ந்த தள்ளையே போற்றி
கோயிற் பதியெலாங் கூடினை போற்றி
கோலக் காவடை கொழுந்தே போற்றி
இறையருள் தாள மேற்றாய் போற்றி
திருநனி பள்ளி சென்றாய் போற்றி
பாணர் வியந்த பாவல போற்றி
அரத்துறை யத்தரை யடைந்தாய் போற்றி
முத்துச் சிவிகைகொள் முனியே போற்றி
பந்தல் பெற்ற பண்பா போற்றி
சின்னம் பெற்ற சீலா போற்றி (௨0)

அருமறை விள்ளா தறிந்தாய் போற்றி
நாவுக் கரசை நட்டாய் போற்றி
அப்பரை யப்பரென் றழைத்தாய் போற்றி
சித்திரப் பாப்பல செய்தாய் போற்றி
பாச்சிலாச் சிரமம் படர்ந்தாய் போற்றி

மழவன் மகட்கருள் மணியே போற்றி
செங்குன் றூர்சேர் சேயே போற்றி
பனிப்பிணி யோடப் பாடினை போற்றி
பட்டீச் சுரவழி பரிந்தாய் போற்றி
சிவனருள் பந்தரிற் சிறந்தாய் போற்றி (௩0)

ஆவடு துறைசே ரந்தணா போற்றி
கிழிபிரான் பாலே கேட்டாய் போற்றி
பிரானருள் பொற்கிழி பெற்றாய் போற்றி
தந்தைக் கக்கிழி தந்தாய் போற்றி
யாழ்க்கடங் காக்கவி யருளினை போற்றி
சாத்த மங்கை சார்ந்தாய் போற்றி
நீல நக்கனை நேர்ந்தாய் போற்றி
மருகல் சென்று மகிழ்ந்தாய் போற்றி
ஆருயிர் செட்டிக் களித்தாய் போற்றி
சிறுத்தொண்ட னன்பிற் செழித்தாய் போற்றி (௪0)

செங்காட் டங்குடி சேர்ந்தாய் போற்றி
புகலூர் தொழவே புக்காய் போற்றி
முருகர் கேண்மையின் முழுகினை போற்றி
அவர்தம் மடத்தி லார்ந்தாய் போற்றி
வீழி மிழலையை விழைந்தனை போற்றி
மிழலையர் தருபொன் மேவினை போற்றி
வாசி தரற்கு வாடினை போற்றி
வாசி தீர வாழ்த்தினை போற்றி
வாசி தீர் காசும் வாங்கினை போற்றி
மறைக்கா டடைந்த மாதவ போற்றி (௫0)

சொற்கோ வுடன்பா சொற்றாய் போற்றி
கோயில் திறக்கச் சோரினை போற்றி
சொற்கோ திறக்கவே சொற்றாய் போற்றி
மற்றவர் திறக்க மகிழ்ந்தாய் போற்றி
அடைக்கவுந் திறக்கவு மருளினை போற்றி
சமண்செய் துயர்செவி சாய்த்தாய் போற்றி
அமணைத் தொலைக்க வவாவினை போற்றி
மதுரைக் கேக மதித்தாய் போற்றி

கோளறு பதிகங் கூறினை போற்றி
குலச்சிறை வணங்கக் குளிர்ந்தாய் போற்றி (சுO)

பாண்டியன் றேவிமுன் படர்ந்தாய் போற்றி
அமணிடு தீக்கோக் காக்கினை போற்றி
பையப் பற்றமுன் பகர்ந்தாய் போற்றி
பாண்டியன் வெப்புநோய் பறித்தாய் போற்றி
ஏடா றெதிர்க்க விழைந்தனை போற்றி
ஏடெரிக் கெரியா திருத்தினை போற்றி
சிவமத நாட்டிய தேவே போற்றி
சமணை வென்ற சமர்த்தா போற்றி
வாழ்கவந் தணரென வாழ்த்தினை போற்றி
முள்ளிவாய்க் கரையினை முன்னினை போற்றி (எO)

ஓடஞ்செலுத்திய வுரவாய் போற்றி
திருக்கொளம் பூதூர் திகழ்ந்தாய் போற்றி
கொட்டமே கமழ்ப்பா கூறினை போற்றி
திருத்தளிச் சேரியைச் சேர்ந்தாய் போற்றி
புத்த நந்தியைப் பொடித்தாய் போற்றி
சம்பந்த சரணர் சார்பொருள் போற்றி
சாரியை வென்ற சதுரா போற்றி
புத்தரைச் சைவராப் புரிந்தனை போற்றி
பூந்தருத் திக்கண் போந்தனை போற்றி
சொற்கோ சுமக்குஞ் சிவிகையாய் போற்றி (அO)

ஓத்தூர் சென்ற வுத்தம போற்றி
ஆண்பனை காய்க்க அருளினை போற்றி
ஒற்றி யூரி லுறைந்தனை போற்றி
மயிலை சார்ந்த மன்னா போற்றி
என்பைப் பெண்ணா வெழுப்பினை போற்றி
குணமிகு சைவக் குரவா போற்றி
நல்லூ ரடைந்த நயத்தாய் போற்றி
நம்பியாண் டார்மகள் நாயக போற்றி
மனைகை பற்றிய மணாளர் போற்றி
தீயே சிவமெனத் தேர்ந்தாய் போற்றி (கூO)

நெருப்பை வலஞ்செய் நேய போற்றி
காத லாகியென் கவியினை போற்றி
சோதியுள் வாயில்காண் தூயா போற்றி
புகழொளி புகப்பலர் புரிந்தாய் போற்றி
நாரியோ டொளியுள் நடந்தாய் போற்றி
நேர்சிவ மாகி நின்றாய் போற்றி
தீந்தமிழ் மறைபுகல் சீரிய போற்றி
கந்தனே யென்னுங் கடவுள் போற்றி
பொன்னம் பலத்துட் புகுந்தாய் போற்றி
ஞானப்பா லுண்ட நாதா போற்றி (க00)

அம்மைபா லுண்ட வழகா போற்றி
சித்தாந் தசைவத் தேசிக போற்றி
வேதியர் மரபின் விளக்கே போற்றி
கோதிலாச் சுடரின் கொழுந்தே போற்றி
செம்மைச் சிவமாய்ச் சிறந்தாய் போற்றி
ஆளுடைப் பிள்ளையா மழகா போற்றி
பொருந்துநற் றமிழா போற்றி போற்றியே. (க0எ)

திருச்சிற்றம்பலம்.

அடிமை,
அ. சுந்தரநாதன்.

உ
சிவமயம்.

பஞ்சாட்சரபுரம் பெருந்திரு வாலையானந்த சுவாமிகள் சைவசமய குரவர், சந்தானகுரவர்களின் வரலாறு பொதிந்த நூற்றெட்டுப்போற்றித் திருவகவல்கள், முறையே ஒவ்வொரு சமய குரவர், சந்தான குரவர்களை யும், சைவ நன்மக்கள் அவர்கள் திருநாட்களிலும் மற்ற நாட்களிலும், வழிபடுங்காலத்து 108 பூவிட்டுப்போற்ற, பெரிதுந் தமிழ்நடையைத் தழு வித்தர வேண்டுமென்று கட்டளையிட்டருள, அங்ஙனமே செய்து முடித்த னர் நம் வித்துவான், அமிர்தஞ் சுந்தரநாதனார். (அவற்றுள் திருஞானசம்பந் தர் நூற்றெட்டுபோற்றித் திருவகவல் இவ்விதழில் வருகிறது. மற்றைத் திரு வகவல்களும் முறையே மற்றை இதழ்களில் வெளிவரும்.) இதில் நூற்று எட்டுப் போற்றி வந்தமை காண்க.

(தாள் ஆளர்.)

தமிழணங்கு தம் மக்களுக்கு அறிவுறுத்தல்.

எல்லாம் வல்ல இறையனார் வாயில்
ஆரியமென்னும் அருஞ்சகோதரனுடன்
கூடப் பிறந்த குலக்கொடி யானே!
சகத்தினில் வந்த அகத்திய முனிவரால்
வளர்க்க வளர்ந்த மங்கையும் யானே!
வேங்கடங் குமரி வேலைசூ ழெல்லையில்
பாங்குடன் பயிலும் பாவையும் யானே!
அகர இகர உகர மாகிய
மந்திர எழுத்தால் வாய்ந்ததும் யானே!
வல்லின மெல்லின இடையினமாகிய
மூவகை மெய்யால் முனைந்ததும் யானே!
தமிழெனுஞ் சொற்குச் சான்றோர் யாரும்
அமிழ்தினும் இனிதென அறைந்தனர் பொருளை
முதலிடை கடையெனும் மூன்று சங்கத்தும்
இயலிசை நாடக மெனும்முத் தமிழாய்ப்
பதினா யிரத்துத் தொண்ணூ றாண்டு
நூற்றுத் தொண்ணூற் றெழுவர்பாண் டியரால்
எண்ணா யிரத்தறு நூறுபா வலரால்
வளர்க்கப்பெற்ற மடந்தையும் யானே
சீதையைத் தேடிச் சென்றவா னரர்க்கு
வழிமுழு துணர்த்திய வானரத் தலைவன்
நான்செழித் திருந்தநான் மாடக் கூடலைச்
சொற்றதா லென்றன் தொன்மையை யறிக
திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும்
குன்ற மெரிந்த குமார தேவரும்
சங்கத் திருந்து தமிழாய்ந் தனரெனில்
இங்கென் பெருமையை யியம்புவார் யாரே!
தொண்டர் தோழனார் தூதுபோ னதுவும்
கணிகண் ணற்காய்க் காஞ்சியை நீங்கி
மணிவணப் பெருமாள் வழிநடை கொண்டதும்
என்பொருட் டென்பதை யினிதி னுணர்க

ஒல்காப் பெரும்புகழ்த் தொல்காப் பியமாய்ச்
சிவபெரு மானே திருவாய் மலர்ந்து
தம்பெயர் நாட்டிய தமிழிலக் கணமாய்ச்
சிந்தா மணிமுதல் ஐந்து காவியமாய்
உள்ள மினிக்கும் வள்ளுவர் நூலாய்
உம்பரும் வியக்குங் கம்பர்கா வியமாய்
திருத்தே வாரமாய்த் திருவாய் மொழியாய்
அரிய புராணமாம் பெரிய புராணமாய்
மற்றுள நூலாய் வாய்ந்ததும் யானே!
ஆரியம் செந்தமி ழாணு னென்று
பரசிவன் உருவமாய்ப் பகரவும் பெற்றேன
திருமா லுருவெனச் செப்பவும் பெற்றேன்
சபதங் கூறுவோர் தமிழ்மே லாணை
கூறவும் பெற்ற குலக்கொடி யானே!
இன்னு மென்பெருமை யியம்பவும் போமோ!
பெருநில வேந்தரும் குறுநில மன்னரும்
சைவ வைணவ சமய குரவரும்
புத்தருஞ் சமணரும் போற்றப் பெற்றயான்
ஆங்கில பாஷை யணுகிய பின்னர்ப்
பெற்ற தாயைப் பேணார் போல
உற்று நோக்குவா ரொருவரு மின்றித்
தளர்வுறு கின்றவென் தளர்வை நீக்குமின்
கம்பரொன்பர் கலந்த தென்றூற் போல்
என்மொழி கலந்தே யியம்புவ தோர்மின்
ஐரோப் பாவில் ஆர்ந்த பசுவும்
அம்மா வென்றே யழைவதை யறிமின்
பாஷா பிமானம் பாரிலின் றெனில்
தேசா பிமானம் சிறிது மின்றாம்
ஆகையா லென்னை ஓகையாத் தழுவி
முன்போ லென்னை முதிர்வுறச் செய்து
வாழுமின்! வாழுமின்! வாழுமின்! நீரே.

ஜி. சதாசிவம்பிள்ளை

நாகை நீலலோசனி பத்திராதிபர்.

உ

தமிழ் மக்கள் கடமை.

ஞாயிறு தோன்றுமுன் படுக்கையிலிருந்து எழுந்திரு. முகம் கை, கால்களைக் கழுவு. இறைவர் திருவடித்தாமரைகளை நினைத்துக் கொண்டே அவருடைய புகழைத் திருவாசகம்போன்ற தமிழ் மறைகளை நெஞ்சு நெக்குருகும்படி பாடுவாயாக. நேற்றுப் பகலும் இரவும் உன்னைக் காத்ததற்காகவும், நல்ல வழியிற் செலுத்தியதற்காகவும் கடவுளுக்கு நன்றியைச் செலுத்து. இன்று உனக்கு நல்லுணவு, நல்லெண்ணம், நற்செய்கைகளைக் கொடுக்கும்படி இறைவனை வேண்டிக்கொள். பெரியோர்களுக்கு வணக்கங் கூறு. இராவிற் படித்தவைகளை நன்றாய்ச் சிந்தனை செய்.

காலை வணக்கம்.

கடவுளே! அருட்கடலே! பொறுமைக் குன்றே! நேற்று அடியேன் வாடாமல் இனிய வுணவுகளைக் காலத்தில் கொடுத்ததற்கும் நன்னெறியிற் செலுத்தியதற்கும், நல்லெண்ணங்களையே கொடுத்ததற்கும் மனம், மொழி, மெய்களால் நன்றி செலுத்துகின்றேன். இந்நன்றியை யேற்றுக்கொள்ள வேண்டுகின்றேன்.

வேண்டுகோள்.

இறைவனே! எல்லாம் வல்லவனே! இன்று அடியேனுக்கு, பழுதற்ற வுணவும்! தீதற்ற வெண்ணமும், நோயற்ற வாழ்வும், மறைவற்ற பாடங்களையும் பணித்தருள வேண்டும். முதல்வரே! அடியேனை தீமையில் விட்டுவிடாதீர். சிறுவனென்று கைவிடாதீர். உம்முடைய திருவடிக்கு உரிமைப்படுத்தும்.

பெரியோர்கள் வணக்கம்.

அம்மையே! அப்பா! ஆசிரியரே! பெரியோர்களே! முற்றத் துறந்த முனிவர்களே! அடியேனை யெல்லா வழிகளாலுங் காப்பாற்றுங்கள். உங்கள் எல்லோருடைய திருவடிகளையும் பணிவுடன் வணங்குகின்றேன்.

மாலை வணக்கம்.

கதிரவன் மறைந்தபின் கைகால்கள் முதலிய வுறுப்புக்களை நன்றாய்க் கழுவி, ஈரம் போக்கித் திருநீற்றை முன்போல் தரித்து

விளக்குமுன்னர் நின்று கடவுள் அருட் திருவுருவை நினைந்து வணங்கு. கடவுளுக்கு நன்றியைச் செலுத்து. இரவிலும் காக்கும் படி வேண்டிக்கொள். பெரியோர்களுக்கு வணக்கங் கூறு.

நன்றி மொழிகள்

அருட்கடலே! சுடர்க்குன்றே! முழு முதலே! எல்லாம் வல்ல இறைவரே! தமியேன் இன்று காலை தொடர்ந்து பிணியுறாது, காத்தமைக்கும் நல்லூண் தந்தளித்தமைக்கும், அடியேனுடைய மனந் தீநெறி வாய்ப்படாது நன்னெறி வாய்ப்படும்படி அருளியதற்கும், அடியேற்கு நல்லுணர்ச்சி அமையச் செய்தமைக்கும் மனம், மொழி, மெய்களால் இறைஞ்சுகின்றேன்.

வேண்டுகோள்.

மருவிலாமணியே! ஒள்ளொளியே! இன்றிரவுப்பொழுது நல்லெண்ணமும், காசற்ற வுண்டியும், பிணியற்ற வாழ்க்கையும் கவினுறுங்கல்வியும் அடியேற்கமையுமாறு பணித்தருள வேண்டுகின்றேன்,

பெரியோர்களுக்கு வணக்கம்.

தாயே! தந்தையே! குரவரே! சான்றோரே! பற்றற்ற அறிவோர்களே! நுங்கள் அனைவருடைய திருவடிகளையும் அடியேனுடைய முடிமேலுறப் பன்முறை யிறைஞ்சுகின்றேன். அடியேற்கு எவ்வாற்றானும் நன்மையையே கொடுத்தருளுங்கள். துன்பம் நீங்கவும், இன்பத்திலேயே திளைத்திருக்கவும் அருள் புரியுங்கள்,

இதனை ஆக்கியோர்,

பஞ்சாட்சரபுரம்

பெருந்திரு வாலையானந்த சுவாமிகள்.

எழுதுதற்கும் அச்சிடுவதற்கும் வேண்டிய எல்லாவித
மான காகிதம்; மை, பேனா, பென்சில் முதலியன
திருச்சிக்கோட்டை
ஜனானுகூல அச்சுக்கூடத்தில்
விலை சரசமாய்க் கிடைக்கும்.
விலை விபரத்தை விசாரித்தறியுங்கள்.

உ

தமிழர்,

ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு.

மலர் க.] திருச்சிராப்பள்ளி, குரோதன, பங்குனி [இதழ் கஉ

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"—(திருக்குறள்)

தமிழ் மொழியும், தமிழர் கடமையும்.

தமிழ் என்னும் சொல் இனிமை என்னும் பொருளைக் கருவது. தமிழ் மொழியின் வளர்ச்சி நாடுவோர் இன்பம் எய்தி இனிது வாழ்வாராவார்.

நம் தமிழ் மொழி ஓர் காலத்திலே, இமயமலைக்கு வடக்கேயும் தனது செங்கோலோச்சி நின்றது எனத் தமிழ் பழைய நூல்கள் கூறுகின்றன, கடைச்சங்க காலத்தில் வட வேங்கடம் முதல் தென் குமரி வரை தமிழ்மொழி பேச்சு வழக்கில் இருந்ததாகத் தெரிய வருகிறது. ஆனால் இப்போது சென்னை மாகாணத்தின் தென்பகுதியிலுள்ள பத்து ஜில்லாக்களிலும் யாழ்ப்பாணம், சிங்கப்பூர், முதலியவிடங்களிலும் தென் ஆப்பிரிக்கா, இரங்கூன் முதலிய நாடுகளிலும் தான் தமிழ்பேச்சு வழக்கில் இருக்கிறது. இதிலும் வட ஆற்காடு தென் ஆற்காடு ஜில்லாக்களிலுள்ள தமிழுக்கும், தஞ்சை, திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் பேசும் தமிழுக்கும், மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களில் பேசும் தமிழுக்கும், சேலம் கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்களில் பேசும் தமிழுக்கும், பிறவிடங்களில் பேசும் தமிழுக்கும் வித்தியாசம் இருக்கக் காண்கின்றோம்.

இனி, சென்னைச் சர்வகலாசாலை இற்றைக்கு 80-ஆண்டுகளுக்கு முன்னர்த் தோற்றியபோது, தமிழின் நிலைமையையும், இற்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைச் சர்வகலாசாலையில்

தமிழ் மொழியிருந்த நிலைமையையும், இப்போது அந்த இடத்திலே தமிழ் இருக்கும் நிலைமையையும் ஆராயின் மிக்க வேறுபாடு தோன்றும்.

தமிழ் மொழியைப் பழைய காலத்தில், சேர, சோழ பாண்டியராகிய மூவேந்தர்களும் பொன்னே போல் போற்றி வந்தார்கள். இவ்வரசர்கள் காலத்தில் பல தமிழ்ச்சங்கங்கள் பலவேறு இடங்களில் தோன்றித் தமிழ் மொழியைப் பல்லாற்றானும் போற்றி வளர்த்து வந்தன. தமிழ்ப் புலவர்களைப் பொற்கிழிகளும், பரிசுகளும், விருதுகளும், அமைச்சுரிமையும் கொடுத்துப் பாராட்டி வந்தார்கள்.

மாற்றார் பலர் தமிழ் நாட்டைக் கவர்ந்த பின்னர் தமிழ் மொழி வளங்குன்றிப் பல வழிகளிலும் ஒடுக்கப்பட்டது. தமிழ் மொழியில் பலவேறு மொழிகள் கலந்து சிதறுண்டு, தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளுவம், ஆய பல மொழிகள் தோன்றலாயின. இம்மொழிகள் வழங்கும் நாட்டிலுள்ளவர்களும், அதற்கு அருகில் வாழும் தமிழ் மக்களும் தம் தாய்மொழியின் பெருமையை மறந்து பிற மொழிகளைக் கலந்து பேசத் தலைப்பட்டனர். இது இங்ஙனமாகச் சென்னைச் சர்வகலாசாலை தோன்றியபின் தமிழ் மொழிக்கு ஒரு சிறிது இடம் தந்து உதவியதன் பயனாக, சென்ற முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் தொழில் சம்பாதிக்க வேண்டும் என்னும் எண்ணங்கொண்டு ஆங்கிலம் படிக்கத் தலைப்பட்ட தமிழ்மக்களுக்குத் தமிழ் நூல்கள் படிப்பதனால் தமிழில் அறிவு சிறிதாயினும் இருந்தது. ஆங்கில அறிவு வளர, வளர, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட நம்மவர்களே, தமிழைப் பைசாச பாஷையென்றும், சூத்திர பாஷையென்றும் கருதி எழுதியதோடும் அமையாது, சென்னைச் சர்வகலாசாலைப் பாடங்களினின்றும் அதனைப் புறக்கணித்து நீக்கினதோடும் நில்லாது, தமிழ் அறிவு புகட்டும் புலவர்களையும் மிகுந்த தாழ்ந்த நிலைமையில் வைத்து நடாத்தலானார்கள்.

இப்போது ஆங்கிலக்கல்வியில் பட்டம் பெற்ற பெரும்பாலரான தமிழர்களுக்குத் தமிழ்ச்சங்க இலக்கிய நூல்கள் இவையெனக் கணக்கிட்டு எண்ணவும் தெரியாமற் போயிற்று. தமிழைப் போற்றுவதாக எண்ணப்படும் சென்னைச் சர்வகலாசாலையிலுள்ள உட்கழகங்களான செனேட் சபை; (Tamil text books committee; Dravidian Board of Studies); தமிழ்ச் சர்வகலாசாலை விசாரணைக் கழகம்

ஆகிய இவைகளில் உறுப்பினராகவிருக்க அவாவும் உறுப்பினர்களில் பெரும்பாலோரும் தமிழையே தாய்மொழியாகக் கொண்ட நம்மவர்களும் சங்க இலக்கிய நூல்களில் அறிவு வளர்ச்சிக்கான பகுதிகள் எவை யெவை, என்ன என்ன, பகுதியைப்பற்றி கூறுகின்றன என்பதும் அறியார். இதன் பயனாக ஆங்கில அறிவு புகட்டும் கல்லூரிகளில் தமிழ் யாதொரு வளர்ச்சியும் இன்றி ஒதுக்கப்பட்டது.

ஆனால் தமிழ் நாட்டைச் சார்ந்துள்ள தாய்மொழிப்பற்று மிகுதியும் உள்ள மகாராட்டியர், வங்காளியரர், ஆந்திர நாட்டார், கன்னட நாட்டினர், இந்தி மொழியைப் பேசுபவர் ஆகிய இவர்கள் ஊக்கத்திற்கும், முயற்சிக்கும் செயல்களுக்கும், தமிழ் நாட்டினர் தாய்மொழியைப் போற்றும் முறைக்கும் ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் வெட்கித் தலை குனியக்கூடிய நிலைமையில் வந்து விட்டோம். அவர்கள் தாய்மொழியில் வெளியிடும் திங்கள் தாள், வாரத்தாள், நாள் தாள்களுக்கு ஒப்ப தமிழ் நாட்டில் நமது தாய்மொழியில் ஒருதாளும் கிடையாதெனின் நமது நிலைமை யிருந்தவாறென்னே! இந்த நிலைமையிலேயே, நாம் இன்னும் சில ஆண்டுகள் கழிப்போமாயின், மற்றவர்களுடைய நாகரிகம் நம்மை விழுங்கி நாம் அவர்களுக்கு அடிமைகளாகப்போவது திண்ணம். இந்தச் சீர்கேட்டினின்றும் நம்மை இறைவன் காப்பாற்றுவாராக. ஆங்கில அறிவு படைத்த தமிழரிற் சிலர், ஆங்கில அறிவு பெறாது தமிழ் அறிவு நிரம்பப் பெற்ற தமிழரைச் சிறிது தாழ்த்தி நோக்கும் நிலைமையிலும் உள்ளார்.

இக்குறைகளை நீக்க நாம் இதுவரைக்கும் எடுத்துக்கொண்டுள்ள முயற்சிகளைச் சிறிது நோக்குவாம். இந்திய நாட்டின் முன்னேற்றத்தை நாடி உழைக்கும் பல அரசியல் இயக்கங்கள் நமது நாட்டில் காண்கின்றோம். இவ்வியக்கங்கள் சிலவற்றின் முதற்கொள்கை யாதெனின் இந்திய நாட்டிற்குத் தன்னரசு கிடைத்தாலன்றி தாய் மொழிகள் வளர்ச்சியடையா என்பதாம். எனவே, நமது நாட்டு மக்கள் இதுபோது தலைசிறந்த கடமையாகக்கொள்ள வேண்டுவது தன்னரசு பெறும் முயற்சி ஒன்றே யென்றும், அதன் பொருட்டே நாட்டிலுள்ள எல்லா மக்களும் ஒத்துழைக்க வேண்டுமென்றும், ஆனால் அரசியலாரோடு மட்டும் ஒத்துழைக்கக் கூடாதென்றும், ஆங்கிலேயர்கள் பிறநாட்டவர்கள் ஆனபடியால் அவர்கள் நம்முடைய நலத்தை நாடுபவர்கள் அல்லர், அவர்களை எந்த வகையிலாவது நமது நாட்டினின்றும் போக்க வேண்டுமென்றும்

அவர்கள் கூறுகின்றார்கள். இந்த எண்ணம் முற்றுப்பெறவேண்டி மனைவி, மக்கள், சுற்றம், வீடு, நிலம் ஆயவற்றைத் துறந்து சிறைச் சாலை புகுந்தனர் சிலர். தம்முயிரையும் தத்தம் செய்தனர் சிலர். இதனால் விளைந்தபயன் யாதெனின், இவர்கள் தம்மை நம்பினவர் களையெல்லாம் தெருவில் தவிக்கவிட்டு, தமக்கும் தமது நாட்டிற்கும் யாதொரு பயனையும் விளைவிக்காது, தாம் படைத்தறிந்த அறிவில் ஒரு சிறு பகுதியை மற்றவர்களும் பெறவேண்டுமென்னும் துறை களை நாடாமல், விளக்கில் விழுந்து வறிதே உயிர் துறக்கும் விட்டிற் பூச்சிகள் போலவும், வெறு வெளியில் ஆற்றிய பொருளுரைபோல வும், விழலுக்கிறைத்த நீர் போலவும், தாமும் துன்பத்திற்காளாகி, மற்றவர்களையும்தமது தாய்நாட்டையும் துன்பத்தில் திளைக்கச்செய்து அழிந்தொழிந்தனர். பின்னர் சமயம் நேர்ந்துழி சில கட்டுரை களில் இவர்கள் கொள்கை முற்றும் தவறுடைத்து என்பதை விளக்க எண்ணியுள்ளோம். இதுபோது நம்முடைய முன்னேற்றத்தை நாடி உழைப்பவர்களெல்லாம் நாம் செய்யவேண்டுவது என்ன வென்று ஆராயின் நமது முன்னேற்றத்திற்காக அரசாட்சியாளரால் நமக்கு வழங்கப்பெற்றிருக்கும் மான்டேக்யூ செல்ம்ஸ்போர்டு, (Montague-Chelmsford) சீர்திருத்தத்தை நாம் செவ்வனே கை யாண்டு நடத்திக்காட்டி, நாம் மேலும் மேலும் பெற இருக்கும் உரி மைகளுக்காகத் தக்க வழியில் சட்டவரம்பிற்கு உட்பட்டுப் போராட வேண்டுமென்பது புலனாகும்.

இந்த உரிமையால் வரிசெலுத்தும் ஒவ்வொருவரும் தம் தம் கடமையை ஓர்ந்து, தமது ஓட்டுரிமையைத் தக்கவழியில் செலுத்த இடம்பெற்றிருக்கின்றார். தகாத வழியில் செலுத்துபவர்கள் பலர் உளர் என்பதை நாம் மறுக்கவில்லை. அங்ஙனம் தகாத வழிகளில் செல் லாது சீர்திருத்தவேண்டுவது அறிஞர் கடனாகும். ஆகவே, வரி செலுத்தும் ஒவ்வொருவரும் தமது ஓட்டுரிமையை தமிழ் வளர்ச்சி யிலும், தமிழ் நாட்டின் வளர்ச்சியிலும் கண்ணுங் கருத்துமாக உள்ள வர்களுக்கும், அதற்காகவே உழைத்தல் தன்னுடைய முதற்கடமை யென நினைப்பவர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும். அப்படிச் செய்யின் நமது மொழியும் நாடும் முன்னேற்ற மடையும். பிறநாட் டாரின் நன்கு மதிப்பும் நமக்குக் கிடைக்கும்.

மேலும் இதுபோது தமிழ்ச் சர்வகலாசாலை ஒன்று நிறு வச் சென்னை அரசாங்கத்தார் ஓர் விசாரணைக் கழகத்தை நியமிக்க

எண்ணியுள்ளார்கள். அவர்கள்கூறும் முடிபுகளை சென்னை சட்ட சபையில் உள்ள உறுப்பினர்களே ஆழ்ந்து யோசித்து முடிவு கட்ட வேண்டியவர்களாக விருத்தலாலே, அச்சமயம் தமிழ் மொழியின் வளர்ச்சியை நாடக்கூடிய மெய்யன்பர்களெல்லாம் ஒருங்கே ஒத்துழைத்தாலன்றி நமது தாய்மொழி முன்னேற்ற மடையாதென்பது திண்ணம். "உடன்பிறந்தே கொல்லும் வியாதி" என்னும் பழமொழிக்கிணங்க சில மேதாவிகள் நமது தாய்மொழிக்குப் பல வழிகளிலும் இடுக்கண் தேடக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

தாய் மொழியில் அன்பில்லாதவர்கள் எவ்வுயிர்க்கும் அன்பில்லாதவர்கள். தமது தாய் நாட்டிலும் அன்பில்லாதவர்கள் ஆவார். அன்னார் தமக்கும் அன்பில்லாதவர்களே; இறைவனிடத்தும் அன்பில்லாதவர்களே. ஆகவே, இவர்கள் நம்முடைய உரிமைகளைக் கவர்ந்துகொள்வதற்கு முன்னர், வெள்ளம் வருமுன் அணைகோலுவதற்கு ஏற்றசமயம் இதுவே யாதலால், நாளை நாளை என்று எண்ணிக் காலந் தாழ்க்காது, நம்மவர்கள் எல்லோரும் ஒருங்கேகூடி இன்றே ஆவன செய்ய முற்படவேண்டும். தமிழ் நாட்டின் மூலை, முடுக்கு களிலெல்லாம் பல்லாயிரக் கணக்கான தமிழ்ச்சங்கங்கள் தோற்றுவிக்க வேண்டும். நம்தாய் மொழியாகிய அருமருந்தன்ன தமிழ்மொழியைக் குறைகூறித்தூற்றுமலிருக்கும் வழிகளை நாட வேண்டும். இதுபோது, தமிழ் முன்னேற்றத்திற்கான முடிபுகளை அடிக்கடித் தக்கவர்களுக்கு அனுப்பவேண்டும். உண்மைத் தமிழ்த் தொண்டு ஆற்றும் தமிழ் அறிஞர்கள் சொல்லும் வண்ணம் நடக்க முற்படவேண்டும். தென்னாட்டில் எவ்வளவோ பேரவைகள் கூடித் தமிழ் வளர்ச்சியைப்பற்றிப் பல ஆண்டுகள் பேசிக் கட்டின முடிபுகள் நிறைவேறுங்காலம் நெருங்கி யுள்ளது. நாம் உறங்காது, அசாவாமல் உண்மைத் தமிழ் அன்பர்களையே சட்டசபைக்கு நாடி அவர்களே வெற்றிபெற நாம் உழைப்போமாயின், இறைவனும் நமக்கு உதவியாக விருந்து தமிழ் மொழியும் வெற்றி பெற்று சீர் ஓங்கிச் சிறப்புறத்தக்க வழிகளை நமக்குக் காட்டுவார். நாமும், நமது நாடும், நமது தாய் மொழியும் முன்னேற்ற மடைவதற்கு இதுதான் ஏற்ற சமயம். இதுதான் ஒவ்வொரு தமிழ் மகனுடைய முதற் கடமை யாகும்.

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"   தான் ஆளர்

திருமுருகாற்றுப்படை.

(508-ஆம் பக்கத்தொடர்ச்சி)

அதுபோது அவ்வாலமரத்தின் இலையொன்று நீரினும் நிலத்தினும் பொருந்த விழுந்தது. மீனும் பறவையுமாக உருப்பெற்று ஒன்றையொன்று இழுப்ப, அப் புதுமையைக் கண்டு இறும்பூதெய்தித் தாழ்த்து நின்றனர் நக்கீரனார். உடன் ஒரு பெரும்பூதம் அங்குத் தோன்றி நக்கீரரை எடுத்துக் கொண்டு சென்று அருகிலிருந்த ஓர் மலை முழைஞ்சில் அடைத்துவிட்டு நீராடச் சென்றது. அங்கு அவ்வாறே அப்பூதத்தினால் முன்னர் அடைபட்டிருந்த தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பதின்மரும் நக்கீரரைக் கண்டு, 'இன்று நீர் வந்தமையின் நாம் ஆயிரம் என்னும் தொகையுடையராயினேம். இனிப் பூதமானது தனது நியமப்படி ஆயிரவர் ஆய்விட்டமையால் நம்மனைவரையும் விழுங்கித் தன் பசிப்பிணியைத் தணித்துக் கொள்ளும். நீர் இன்று பூதத்தினிடம் அகப்பட்டதனால் இதுவரை உயிரோடிருந்த எமக்கெல்லாம் இன்று இறுதிக்காலம் நேர்ந்துவிட்டது; என் செய்குவம்.' என மிக மிக வருந்தினார்கள். அது கேட்ட நக்கீரனார் மனம் மாழ்கலின்றி இப் பேரிடரினைப் போக்கக்கருதி 'முருகப் பெருமானது ஆறெழுத்தினை ஓதுவதால் பிறவிப் பிணியும் நீங்குமென்னில் பிறபிணிகள் நீங்குவதில் தடை என் உளது? ஐம்பூத வாயில் அகப்படும் உயிரை மீட்டுத் தம் செம்பதுமத் திருவடி நீழலில் வைக்கும் குமரவேளுக்கு ஒரு சிறு பூதத்தால் உற்ற இச் சிறையினின்றும் விடுவித்தல் அரியதாமோ?' என நினைந்து, நினைந்தன நினைந்தாங்குதவும் திருமுருகாற்றுப்படையினை மொழிந்தனர். மொழிதலும் அறுமுகப் பெருமான் மயில்மிசை இவர்ந்து தோன்றி அனைவரையும் சிறைவீடு செய்து, கீரனார் வந்த காரணங் கேட்டுக் 'கைலை காண' எனத் தமது திருத் தந்தையார் பொதுவிற்கூறியிருத்தலின் தென் கயிலை காணினும் இவருற்ற நோய் நீங்குமெனக் கருதி 'இக் குளத்தில் மூழ்கிற் கைலை காணுதி' எனப் பணித்தனர். புலவரேறும் முருகக் கடவுளின் ஆணையைச் சிரமேற் கொண்டு குளத்தின் மூழ்கிப் பொன் முகரி யென்னும் புனித நதியில் நோய் நீங்கி எழுந்து தென் கைலாயமாகிய சீகாளத்தியைச் சேவித்தனர். சேவித்துத் திருக் கைலாயமும் திருக்காளத்தியும் ஒன்றென்னும் கருத்துடையராய்க்

'கைலைபாதி காளத்திபாதித் திரு அந்தாதி' யால் அவ்விரண்டினையும் மாறி மாறித் துதித்து, உடற்பிணி தவிர்த்தாங்கு உயிர்ப்பிணியாய ஆணவத்தினின்றும் மீட்டு ஆட்கொள்ளல் வேண்டுமெனப் பிரார்த்தித்துக் காளத்தியப்பருடைய திருவடி நீழலிற் கலந்தருளினர்; என்பது

இங்கெடுத்துக்கொண்ட இரண்டு புராணங்களிலும் திருமுருகாற்றுப்படை பாடிய வரலாறு கூறப்படினும், ஒன்று கூறுமாறு மற்றொன்று கூறுகின்றிலது. திருப்பரங்கிரிப் புராணம் திருமுருகாற்றுப்படை திருப்பரங்குன்றத்தே பாடப் பெற்றதாகக் கூறுகின்றது: திருக்காளத்திப் புராணமோ, அஃது இமயத்தில் பாடப்பெற்றதாகக் கூறுகின்றது. நக்கீரர் சிறையிலடைக்கப்பட்டதன் காரணத்தையும் முன்னது கூறுகின்றாங்குப் பின்னது கூறவில்லை. பிறவேறுபாடுகளும் ஆராய்ந்தறிக. இன்னும் நக்கீரர் வரலாறு காணப்பெறும் பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணத்திலேனும், நம்பியார் திருவிளையாடலிலேனும் நக்கீரர் திருமுருகாற்றுப்படை பாடிய பகுதி காணப்பெறவில்லை இப்பகுதி திருவிளையாடல்களில் சேர்ந்திலது போலும். இதுவேயுமன்றி முன்குறித்த இரண்டு * புராணங்களிலும் காணும் முருகாற்றுப்படை பாடிய வரலாறுகளில் ஒன்றுக்கேனும் ஒரு சிறு பகுதிக்கேனும் 'திருமுருகாற்றுப்படை' என்னும் நூலில் அகச்சான்றாக யாதொரு செய்தியும் கிடைத்திலது. சரித்திரக்காரர் (Historians) அகச்சான்றையே பெரியதோர் ஆதாரமாகக் கொள்வர். இங்ஙனமாகத், 'திருமுருகாற்றுப்படை பாடிய' காரணம் இது எனத்துணிந்து கூறுவதியலுவதொன்றோ? என்பது ஆராயற்பாற்று. எனினும் ஒன்று துணிந்து கூறலாகும். என்னை? முருகாற்றுப்படை முருகப்பிரான் புகழ்மாலையாதலானும் முருகன் தமிழ்த் தெய்வமாதலானும் முருகன் குறிஞ்சிநிலக்கடவுளாதலின் இவ் வாற்றுப்படையுள் பெரும்பாலும் மலைகளினிடத்தே முருகன் எழுந்தருளி யிருப்பது சிறப்பித்துக் கூறப்படுதலானும் ஆற்றுப்படையாக நூல் செய்தல் தமிழ்ப்புலவரது தொன்றுதொட்ட வழக்காதலானும் நக்கீரனார்

* இப்புராண ஆசிரியர்களது 'திருமுருகாற்றுப் படையைப்' போற்ற வேண்டும் என்னும் கருத்து மிகவும் மதிக்கற்பாலது. அவர்களது அன்பைப்பற்றி எட்டுணையும் குறைத்துப் பேசுதல் இயலாது.

தமிழ்நாட்டில் தமிழ்மொழியில் தமிழ்க் கடவுளை ‡ஆற்றுப்படையில் தமிழ் *பயப்ப உளங்கனிந்து 'பத்திச்சுவை நனி சொட்டச் சொட்ட' பாடி யருளினர் என்பது. இங்ஙனம் கொள்ளுதலான் இந்நூலுக்கும் நூலாசிரியருக்கும் நூலுட் கூறப்படும் முழுமுதற் பொருளுக்கும் பெருமையே யாவதன்றி யாதொரு இழுக்கும் வாராதென்பது நுண்ணுணர்வோர்க்குப் புலனாம்.

இன்னும், 'திருமுருகாற்றுப்படை' என்பதற்கு 'வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை வீடு பெற்றானொருவன் வீடு பேறாகிய பரிசில் தரும் முருகனிடத்தே ஆற்றுப்படுத்தல்' என்று பொருள் கொள்ளப்படுதலின், புலவர் பெருமானாகிய நக்கீரர் சீவன் முத்த நிலை (உடலோடிருந்தே பாசங்களினின்று விடுபட்டுப் பேரின்பம் நுகரும் நிலை) யிலிருந்து பாடியுள்ளார் என்பதும் அப்பாட்டாகிய திருமுருகாற்றுப்படை ஒப்புயர்வில்லா விழுப்பொருள் பயப்பதாகும் என்பதும் தாமே பெறப்படும் என்க,—இங்ஙனம் உயிர்ப்பிணியைப் போக்கவல்ல ஒரு நூலை உடற்பிணி போக்குதற் பொருட்டுப் பாடப் பெற்றது என்பது எதுவரையில் பொருந்தும் என்பதை அறிஞர் ஆய்ந்து கொள்க,—எனவே,

தொன்மையும், தூய்மையும், இனிமையும், தனிமையும், தண்மையும், ஒண்மையும் அமைந்துள்ள தமிழ் மொழியில் தனித்தமிழ்ப் பாட்டுக்களாகும் பத்துப்பாட்டில் முதலதாக எண்ணப்பெற்ற திருமுருகாற்றுப்படையை அன்புடன் ஓதி உணர்வோர் சொல்வளமும் பொருள் வளமும் அருள் வளமும் அடைவர் என்பதில் எட்டுணையும் ஐயமின்று. அன்பர்கள் ஓதியுணர்ந்து இன்புறுவாராக.

வாழ்க இறையருள்: வாழ்க தமிழ் மொழி: வாழ்க தமிழர்:

திரிசிரபுரம், ம. பெரியசாமிப்பிள்ளை.

---

* தமிழ் — இனிமை

‡ ஆற்றுப்படை என்பதன்விளக்கம் இக் கட்டுரையின் தொடக்கத்தே விரித்து எழுதப்பெற்றுளது—181-ஆம் பக்கத்தில் காண்க.

நம்மவர்கள் முன்னேற்றத்திற்கு உழைப்பன சென்னையில் வெளியாகும் நாள் தாள் (தினப்பத்திரிகை) திராவிடனும்: (மாதசந்தா ரூ. 1—0—0); ஈரோட்டில் வெளியாகும் குடியரசும் ஆகும். (வருட சந்தா ரூ. 3-0-0) ஆகவே, இவைகளை உடனே எழுதி வரவழைத்து படித்து மகிழுங்கள்.

Tamil Scientific Terms.

(*Continued from pvge 500.*)

Regular figure is முறை வடிவம் or முறை வடிவு.

Regular pentagon முறை ஐம்முடக்கி and so on,

Regular polygon is முறை பன் முடக்கி.

Irregular is முறையில் and irregular figure is முறையில் வடிவம்.

Adjacent is அடுத்த.

Adjacent angles is அடுத்த முடக்குகள்.

Diagonal simply means through angles and it signifies the line which passes through opposite angles. Therefore the proper Tamil term is முடக்குருவி that is முடக்கு, angle and உருவி that which passes, or முடக்குருவரை.

Complement means that which Completes and in the case of angles a complete angle is reckoned to be a right angle and hence a complementary angle is understood to be the one which with the given other angle completes a right angle. The assumptions need not be translated into the Tamil term and the term rendered clumsy and they, the assumptions, may be implicit just as in the English term. To complete is in this case to fill up the deficiency and the corresponding Tamil term is நிறைக்க or முழுதாக்க and complement is நிறைப்பு முழுதாக்கல், and complementary angles is நிறைக்கு முடக்கு or முழுதாக்கு முடக்கு Ex: if the sum of two angles is a right angle, then the two angles are complementary angles இருமுடக்குகளின் கூடுதல் ஒரு முழுமுடக்கிற்குச் சரியானல் அவ்விரு முடக்குகளும் ஒன்றற்கொன்று நிறைக்கு முடக்கென்னப்படும், முழுதாக்கு முடக்கென்னப்படும். Supplement means that which is supplied, but in its application to angles it is conventionally understood to be that additional supply of an angle to another angle so that in the aggregate the angularity is altogether removed or in other words, both the angles, the original and the supplement put together make two right angles i. e., a straight line. Here too it is neither advisable nor necessary to

translate the implications of the English term in explicit language into the Tamil term and implications may be left as implications in the Tamil term as well. To Supplement is சேர்க்க, to supplementary angle is சேர்க்கை முடக்கு or சேர்முடக்கு We may even improve upon the English term to convey more scientific sense and adopt நீட்டும் முடக்கு for supplementary angle, because it goes to remove the angularity altogether, thus நிறைக்கு முடக்கு, முழுமுழுதாக்கும் முடக்கு will be complementary angle and நீட்டு முடக்கு will be supplementary angle.

Side in Tamil is சிறை, both sides is இரு சிறை and that which has sides is in Tamil சிறைஇ (the prolongation grammatically gives the sense 'that which has'.

The word பக்கம் is now commonly used for side but it will be seen that பக்சம் will not admit of agglutination with as much facility as சிறை for various applications. Therefore சிறை is preferable as the standard term for side

Bilateral is இருசிறைஇ.
Trilateral is முச்சிறைஇ.
Quadrilateral is நாற்சிறைஇ.
Pentilateral is ஐஞ்சிறைஇ.
Hexalateral is அறுசிறைஇ.
Septalateral is எழுசிறைஇ.
Octalateral is எண்சிறைஇ, and so on.
Polylateral or Multilateral is பல்சிறைஇ.

Then we have for Equilateral figure சரி சிறைஇ, and for equilateral triangle சரிசிறை மும்முடக்கி.

Isosceles means isos, equal and scale, leg and so in Tamil சரி சால if adjectival or சரி காலி if now just as முக்காலி, நாற்காலி, then Isosceles triangle is சரிகால மும்முடக்கி.

Opposite sides is எதிர் சிறைகள்.

Rectilinear is நேர் வரையின் or நேர்வரைஇ; according as it is used in adjectival or nominal sense.

Scalene means that which has unequal sides and so in Tamil it is ஒவ்வாச்சிறைய ஒவ்வாச்சிறைஇ. according as the word is used in adjectival or nominal sense.

Scalene triangle will thus be ஒவ்வாச்சிறை மும்முடக்கி.

Irregular triangle will be the same as scalene triangle in effect but in expression the former is முறையில் மும்முடக்கி.

Regular triangle will be the same as equilateral triangle in effect but in expression the former is முறை மும்முடக்கி.

Square in Geometry means by convention a four sided figure which has all its sides equal and also angles equal, but the root meaning is nothing more than, 'that which has four'. சதுரம் a Sanskrit word is commonly used for square in Tamil and this சதுரம் too is no better than square in its root meaning. Now that we are constructing all the scientific terms for Tamil. There is no reason why this wrong term or at the best very defective term சதுரம் should not be expunged and a more scientific Tamil term adopted.

சரிசிறை செம்முடக்கி or சரிசிறை முழு முடக்கி conveys the complete sense to refer to square or சதுரம் alone, but without the defects and devoid of conventions. A figure having all right angles with equal sides can be nothing except a square. Square as a regular quadrangle will be முறை நான் முடக்கி in Tamil.

Square as index in Algebra will be dealt with under Algebra.

Adjacent sides is அடுத்த சிறைகள்

To bisect is literally to cut into two parts but by convention it means into two equal parts. There seems to be no objection to retain the convention in Tamil as well and call it இருகூறிடு. Should the expression be devoid of convention it is only necessary to expand it a little as இருசரி கூறிடு.

To bisect an angle is முடக்கிரு கூறிட or முடக்கிரு சரி கூறிட.

To bisect a line is வரையிரு கூறிட or வரையிரு சரி கூறிட.

To trisect is முக்கூறிட or முச்சரிகூறிட.

To quadrisect is நாற் கூறிட or நாற் சரி கூறிட.

To intersect is to cut between and in Tamil is இடை வெட்டு, intersection; is இடை வெட்ட, intersecting line is வெட்டு வரை and intersection point is வெட்டுமுனை and intersecting line of place is வெட்டு வரை.

Oblique is சாய்ந்த or briefly சாய்

Oblique sides is சாய் சிறைகள்.

Oblong literally means that which has its length greater than its width and the nature of the angles is not signified in the term but by convention it means a right angled four-sided figure with its length greater than its width நீண்ட சதுரம் or நெடுஞ் சதுரம் is used now. This is not only a mixture of Tamil and Sanskrit, but is incongruous in its meaning as can be more easily perceived in expressions of the sort, Circular triangle, Straight curve, because சதுரம் as universally understood can never be long, The Tamilian says, 'குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்ளுவானேன்', 'Why should one who goes to bathe smear mire over his body?. As we are constructing the terms let us have correct ones eleminating conventions as far as possible, and incongruencies altogether. I would recommend நெடுஞ்சேம முடக்கி or நெடு முழு முடக்கி for oblong which cannot but fully convey the sense of oblong with all its conventions.

Collinear is ஒரு வரைய or ஒரு வரையின.

Convergent is குவி and divergent is விரி. Convergent lines is குவி வரைகள் and divergent lines is விரிவரைகள்.

Horizontal is மட்டமான and horizontal line is மட்டவரை.

Parellellism in Tamil is ஒரு போக்கு or ஒரு போகு.

Parallel lines is ஒரு போகு வரைகள்.

Parallel curves is ஒரு போகு நெளிகள்,

Thus parallellogram is ஒரு போகு சிறையினது or briefly ஒரு போகு சிறை இ.

(To be continued)

பா. வே. மாணிக்கம் நாயக்கர்,
பி. இ., எம், சி. ஐ. எம். ஐ. இ,

வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும்.*

உலகத்தில் மனிதர்க்கு நேரிடும் கஷ்ட நஷ்டங்கள் சில சமயங்களில் அதிக கொடுமையாகவும், அவைகளின் காரணங்கள் மெத்த விநோதமாகவும் இருக்கின்றன. ஆகையால் அவர்கள் எல்லாம் அதிர்ஷ்ட இலட்சுமியால் ஆவது என்னும், குருட்டு நம்பிக்கைக்கு இடங்கொடுத்துக் கெடவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். மூடரும் விசாரணை யில்லாக் குருட்டு நம்பிக்கைக்காரரும் இந்த விஷயத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆயினும் அப்பேர்ப்பட்ட வஸ்து ஒன்று இப்படிப்பட்ட விஷயங்களிற் பிரவேசிக்கிறதென்பதையும், அல்லது உண்மையாகவே அப்பேர்ப்பட்ட வஸ்து உலகத்தில் உள்ளது என்பதையும் நம்புவதற்கு ஞான சாஸ்திரங்களில் இதுவரையில் சரியான ஆதாரம் இல்லை. ஆனால் எப்போதும் எல்லா யுகங்களிலும், மாந்தர், இம்மன தேவதையாகிய அதிர்ஷ்ட இலட்சுமிக்கு அதிக அபசாரம் செய்துவருகிறார்கள் என்பதையும், அவளுக்குக் கொஞ்சமேனும் சம்பந்தம் இல்லா விஷயங்களைக்கொண்டு அவள் மேற் குற்றஞ் சுமத்துகிறார்கள் என்பதையும் எல்லார்க்கும் நன்றாய் விளக்கிக் காட்டலாம். இப்படி அவர்கள் தங்கள் துரதிர்ஷ்டத்தின் சிலவற்றிற்காக அம்மன தேவதையின்மேல் தகாப்பழி சுமத்திக் குற்றவாளிகளாகிறபடி, நல்லதிர்ஷ்டம் என்று அவர்கள் சொல்லுகிற சில வற்றிற்கும், (அவளுக்குக் கொஞ்சமேனுந் தகாத) அவளுடைய பெருந்தன்மையே காரணமென்று உபசாந்தி செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள். வல்லமைத் திருடர் வளம்பெறுவதையும், நல்ல குணமுள்ள மூடர் துயர் உறுவதையும், உலக ஞானமார்க்கத்தை விட்டு தங்கள் உள்ளத்தில் ஓங்கியுள்ள பேராசைக் குருட்டு மார்க்கத்தைப்பின்பற்றி, அறிவுடையோர் அல்லலுக்கிடம்பண்ணிக் கொள்ளுவதையும் காணும்பொழுது, மாந்தர் அதிசயம் அடைந்து கலவரமாய் அதிர்ஷ்ட இலட்சுமியின் திருவுள்ளமாற்றமே இந்த ஏறுமாறான விஷயங்களுக்குக் காரணமென்று தம்மையும் அறியாமல் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

---

* இப்பாகம் சென்னை நகர் ஷெரிப்பாயிருந்த திவான்பகதூர் ச. பவானந்தம் பிள்ளை அவர்கள் ஐ. எஸ். ஓ. எப். ஆர். எச், எஸ். (இலண்டன்) எம். ஆர். ஏ. எஸ். (இலண்டன்) செய்த பிரசங்கங்களினின்றும் எழுதிய வியாசங்களினின்றும் தொகுக்கப்பெற்றது.

"அழகிருந் தென்ன பண்ணும்
அதிர்ஷ்ட மிருந்தால் உண்ணும்"

என்பது அவர்கள் கோட்பாடு. ஆனால், எல்லாம் அதிர்ஷ்டத்தால் ஆகிறதென்று குருட்டாட்டமாய்ச் சொல்லுகின்ற இந்த சாதாரண இயற்கைச் சம்பவங்கள், சாதாரணமாய்த் தவறுதலில்லாத ஒழுங்கான இயற்கைப் பிரகிருதியின் அளவாய் நேரிடுபவைகள் என்று நியாயமாகவும் சந்தேகமில்லாமலும் எண்பித்துக் காட்டலாம். மாந்தர் தம் வாழ்நாட்களில், அதிர்ஷ்டதேவதையின்மேல் குற்றஞ் சுமத்துகிற ஆபாசத்திற்கும், நன்றாய்ச் சதுரங்கமாடமாட்டாதவன் தன்னுடைய அதிர்ஷ்ட வீனத்தைக்குறித்து முறையிடுவதற்கும் வித்தியாசமேயில்லை. இதுபற்றியே பின்வரும் செய்யுட்குறையாகிய அந்தத் தேவனால் ஆமென்று மூடர்கள் அதோகதி அடைவாரே என்பதையுங் கவனித்துக்காண்க.

வாழ்வை, மற்ற வித்தைகளைப்போல, உலகமேடைமேல் நடித்துக்காட்டும் நாடகவித்தையென்று சொல்லலாம். அதில் நேரிடும் பெருஞ் சம்பவங்கள் சாதாரண இடையூறுகளாய் சிற்ப வேலை தீர்ந்த நிலைப்பதுமை அல்லது பெருங்காவியத்தின் பற்பல அங்கங்கள் அல்லது பாகங்களைப்போலிருக்கின்றன.

பெருஞ்செல்வமானது கூத்தாடுமிடத்திற் கூடியுள்ள கூட்டத்தைப்போன்றது, அது போவதும் (வறுமை வருவதும்) அந்தக் கூட்டம் பிரிந்து போவதற்குச் சமானமாகும் என்னும் கருத்துள்ள பின்வரும் குறள் வெண்பாவைக் கவனிக்க:

"கூத்தாட்டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அது விளிந்தற்று"

இங்கே பெருஞ்செல்வமென்றது, அந்தச் செல்வத்தால் வாழும் வாழ்வைக்குறித்ததாகும். எவனொருவன் இன்னொருவனை அதிர்ஷ்டமுள்ளவன் அல்லது அதிர்ஷ்டமில்லாதவன் என்று துணிந்து சொல்லுகிறானோ அவன், ஒரு சிற்பியை அல்லது கவிராயனை அவனுடைய வேலையை முடிப்பதில் அதிர்ஷ்டமுள்ளவன் அல்லது அதிர்ஷ்டமில்லாதவன் என்று சொல்லும் மற்றொருவனைப்போலப் பொருத்தமில்லாப் பொய்யுரை கூறுங் குற்றவாளியாகிறான். எந்த விஷயத்திலும் இடையறா ஊக்கமும் தொழின்முயற்சியுமே வெற்றியை விலை கொடுத்து வாங்கக்கூடியன. அதிர்ஷ்டத்துக்காவது விதிக்காவது அதிற்கொஞ்சமேனும் சம்பந்தமே இல்லை.

தேச சரித்திரங்கள், இதிகாசங்கள், வாழ்நாள் வரலாறுகள் (ஜீவிய சரித்திரங்கள்) முதலிய எழுத்து மூலங்களில் நாம் என்ன வாசிக்கின்றோம். வாணிபத்தில், கல்வியில், கைத்தொழிலில், சாஸ்திரத்தில், செய்திறமையில், செய்தொழிலில் மனஞ்சோராமல் முடிப்பதில் வெற்றிபெற்ற விதத்தைப்பற்றியே வாசிக்கிறோம். அவைகளில் நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது விதம், கடத்தற்கரிய பேரிடையூறுகளைக்குறித்தும், அவைகளைக்கடப்பதற்காகச் செய்த விடாமுயற்சிகளைக்குறித்தும் கூறியுள்ள பழம் பாட்டிக்கதையாகவேயிருக்கும். விடாமுயற்சி செய்தால் விதியை வெல்லும் வல்லமையும் உண்டாகும். இதற்கு, உலகத்தாரெல்லாரும் அறியும்படி, பதினாறு வயதில் தான் இறக்கவேண்டும் என்னும் விதியை வென்று, எமனுக்கு எமனாயிருந்து அவனைக்கொன்ற மார்க்கண்டேய மாமுனிவரே போதுமான சாட்சியாவார் என்னுங்கருத்தமைந்த

"உலையா முயற்சிகளைகளு ஊழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளை தின்று மறலி உயிர்குடித்த
கான்முளையே சாலுங் கரி" என்னும் செய்யுளையும்,
"தெய்வத்தாலாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்" என்னுந்திருக்குறட்பாவையும்
இங்கே உய்த்துணர்ந்து காண்க.
"யோசிக்கும் வேளையில், பசிதீர வுண்பதுவும் உறங்குவது
மாகமுடியும்" என்னும்

ஆன்றோர் வாக்கை ஆழ்ந்து கவனித்தால்; எல்லா மாந்தரும் விடாமுயற்சியின்மையில், சரிசமானமாய் இருக்கிறார்கள். ஆனால் உலகத்தார் அப்படி எண்ணுகிறதில்லை. விடாமுயற்சியென்பதுதான், வாழ்நாளின் எந்நிலைமைக்கும் முன்னிலையாயுள்ள உயர் குணத்தின் சாரமாயிருக்கிறது. அதுவே எல்லாவித நல்லொழுக்கங்களும் மேன்மைகளும் நண்ணியிருக்க நாடும் பர வெளியாகும்.

விடாமுயற்சியைக் கெடுக்கவும் குறைக்கவும் சில சமயங்களில் இயற்கை வல்லமையும் கால இயல்பும் கருவியாயிருக்கின்றன. இவைகளைப்பெற்றுள்ள மாந்தர் உழைத்து ஒழுங்காய்ப்பாடு படுவதை அசட்டை செய்ய நேரிடும். அப்படியானால் இது, மற்றக்குற்றங்களைப்போல அவமானம் உண்டாக்கும். இதற்கு, விடாமுயற்சி செய்து நடந்த ஆமை நடை, வேகமான முயல் ஓட்டத்தை இறுதி

யில் வென்றதே சான்றாகும். பின்வரும் திருக்குறள் நீதிவெண்பாவைக் கவனித்துக்கொள்க.

"தூங்குமுயல் ஆமைக்குத் தோற்றதனால் மானம்போய்
ஏங்கியிருந்ததை நீ எண்ணிப்பார், — ஓங்கும்
முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்."

சாதாரணக் குடிமக்களிலிருந்து பேர் பெரிய பற்பல மாந்தர் கிளம்பின தேசமென்று பெருமை பாராட்டிக்கொள்ளக்கூடிய தேசம், இங்கிலாந்து ஒன்றேயாகும். ஆகையால் அந்நாட்டாரே உலகில் எந்நாட்டாரினுஞ் சிறந்தோராவார். கல்வி மூலம், அரசு மூலம், வாணிக மூலம், சாஸ்திர மூலம், கைத்தொழில் மூலம் முதலிய எல்லா மூலங்களிலும் முழுவதும் தமது சுயமுயற்சியினாலேயே தம்மைத் தாம் உயர்த்து, நிறுத்திப்பேர்போன ஆங்கில மக்கள் அநேகர். அவர்களுக்குப் பிறவி யனுகூலமுங்கிடையாது, பொருள் உதவியும் இல்லை. நட்பு வன்மையும் இல்லை. இதுபற்றிப் பின்வரும் நாலடிச்செய்யுளை நன்கு கவனிக்க.

"நன்னிலைக் கட்டன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடுவானும் நிலையினும்
மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்
தலையாகச் செய்வானுந் தான்."

இதனால், நல்ல நிலையில் தன்னை நிறுத்துபவனும், தாழ்ந்த நிலையில் தன்னை நிறுத்துபவனும், அந்நிலையிலிருந்து தன்னை மேலும் மேலும் உயர்த்தி உச்சத்தில் நிறுத்துபவனும், அவ்வுச்ச நிலையில் தன்னைத் தலைவனாகச் செய்து கொள்பவனும் எல்லாம் தானே யாகும் என்று பெறப்படுவது காண்க.

இப்படி அதிர்ஷ்டத்தையும் புகழையும் வென்று தமதாக்கிக் கொண்டு, நிலையற்ற அதிர்ஷ்ட தேவதைகளைத் தமது திருவுளப்படி அடக்கி ஆட்படுத்தியுள்ள ஆங்கில மக்களின் நாமாவளியை நாம் கவனித்துப்பார்க்கையில், அவர்கள் நம்போலியர்கள் அன்று. நம்மினும் வேறான சிருஷ்டி பேதம் உடையவர்கள். நமக்கு எட்டாத உபகரணங்கள் அவர்களுக்கு எட்டியிருந்தன என்று அடிக்கடி நாம் எண்ணிக் கொள்ளவேண்டியவர்களாய் இருக்கின்றோம். இந்தத்தீர்மானம் இயற்கையானதுதான்; ஆனாலும் சுத்தத்தவறு. (தொடரும்)

வி. அண்ணுசாமிப் பிள்ளை, சென்னை.

சமயம்.

(524-ஆம் பக்கத்தொடர்ச்சி.)

மாயாவாதம்.

மாயாவாதமாவது:—சச்சிதானந்தமாய், நித்தியமாய், வியாபகமாய் நிற்பது பிரமம். பரமார்த்தத்திலே சத்தொன்றே மெய்ப்பொருள், ஏனைய வெல்லாம் பிரமத்தின் விவர்த்தனமாய் இப்பியில் வெள்ளிபோல அவிச்சையினாற் காணப்படுவன வாகலிற் பொய். இங்ஙனம் தோன்றும் உலகத்திற்குமுதற்காரணமாகியமாயை, பிரமம்போலச் சத்துமன்றி முயற்கோடுபோல அசத்தும் அன்றி அநிருவசனமாயிருக்கும் அநிருவசனம் என்பது சொல்லொணாதது என்பது. நிர்மலமாயிருக்கின்ற ஆகாயத்தை மேகம் மறைத்த தன்மை போலச் சுத்தமாயிருக்கின்ற பிரமமும் அந்த மாயா வுபாதிகளினாலே வாதிக்கப்பட்டு இந்த வுடலிலே மயங்கி நிற்பதே ஜீவான்மா. ஆகாயத்திலே காற்றுத்தோன்றி மேகத்தை நீக்கியன்தப்போல ஜீவான்மாவிடத்தில் வேதாந்த விசாரத்தால் தோன்றிய ஞானத்தால் இந்த மாயைக்கு வேறாகிய பிரமரூபமே யான் என அறிவதே முத்தி என்பதாம். மாயாவாதத்தில் நிரீச்சுர சாங்கியமெனும் உட்பிரிவுண்டு.

நிரீச்சுர சாங்கியம்.

நிரீச்சுர சாங்கியமாவது:—பிரகிருதியானது தூலசுக்குமமாய் எல்லாப்பொருள்களுக்குங் காரணமாய் உள்ளது; முக்குணங்களும் ஒத்து நிற்கிறதே தனக்கு வடிவமாய் அரூர்த்தமாயிருக்கும். புத்தி முதல் பிருதிவி யீறாகிய தத்துவங்களிருபத்துமூன்றும் இதனுடைய வியாத்தியாயிருக்கும். அதனோடுங்கூடின் சுத்தபுருடனும் பாலர்களைப் போலச் சேட்டையுண்டாய்ப் பல யோனிகளையு மெடுத்து இந்தக் குணங்களோடும் அநாதியே கூடிப் புத்தியை உடைத்தாய் அவ்வித்தையின் வசத்திலே ஒழுகி பிறப்பின் பாற்பட்டு சுக துக்கங்களை அடைவன். அந்தப் பிரகிருதியின் தன்மையை அறிந்து புத்தியை அடைந்திருக்கின்ற அறியாமை நீங்கி, விகிருதியாலுண்டான சுகதுக்கங்களைப் பிரகிருதிக் குண்டானதென்று கண்டு இது ஆன்மாவுக்கில்லை யெனக்கொண்டு முக்குணங்களடங்க விருப்பது முத்தி என்பதாம்,

பாற்கரியவாதம்.

பாற்கரியவாதமாவது:—முற்கூறப்பட்ட பிரமமே சடமுஞ் சித்துமாகிய உலகங்களாய்ப் பரிணமித்தது. அங்ஙனம் பரிணமித்து

விகாரப்பட்டமையை அறியாமையினாற் பந்தமாயிற்று. பரமார்த்தத்தில் ஒருபொருளே கன்மத்தை யநுஷ்டிக்கும் முறையிற் றோன்றிய வேதாந்த ஞானத்தால் உடம்பிற்கு வேறாகிய ஆன்ம ரூபமாய் விளங்கும், அதுவே பரப்பிரமம் என்றறிந்து அதன்கண் இலயித்தலே முத்தி என்பதாம்.

கிரீடாப் பிரமவாதம்

கிரீடாப் பிரமவாதமாவது:—முற்கூறப்பட்ட பிரமமே நான். நான் ஒருபடித்தன்றிப் பலவேறு வகைப்பட்ட விகாரப் பொருள்களோடு கூடிப் பலவாற்றான் விளையாடுகின்றேன் என்று இவ்வாறறிவதே முத்தி என்பதாம்.

சத்தப்பிரமவாதம்,

சத்தப்பிரமவாதமாவது:—காரணமாகிய பரப்பிரமம் இறுதிக் காலத்திற் சத்தவடிவிற்றாய் இருக்கும். அஃது அவிச்சையினாற் சடமுஞ் சித்துமாய உலகங்களாய் விரியும். முடிவின்கண் சத்தமாத்திரையே உள்ளது என அறிவதே முத்தி என்பதாம்.

சாங்கியம்.

சாங்கியமாவது.—மூலப்பகுதி, நித்தமாய் வியாபகமாய்ச் சடமாய் எல்லாப்பொருட்குங் காரணமாய் முக்குணங்களும் ஒப்ப நின்ற அவதரமாய் அருவாய் உள்ளது. இஃது இருபத்து நாலாம் தத்துவம். இருபத்தைந்தாந் தத்துவம் புருடன். புருடன் பெத்தம் முத்தி இரண்டிலும் ஒரு தன்மையனே, தாமரை நீர் போல் ஒட்டற்று நிற்பன். மூலப்பகுதியின் பரிணாமம் புத்தி. அதுவே மான் என்றும் அந்தக்கரணம் என்றும் பெயர்பெறும். அநாதியே புத்தியைச் சார்ந்த அவிச்சை வயத்தாற் பெத்தனெனப்பட்டு இன்பத்துன்பவுணர்வு தோன்று நின்றது மூலப்பகுதியையும் புருடனையும் பகுத்துணர்வதால் அவிச்சை நீங்குவதே முத்தி. ஆன்மாக்களுக்கு வேறாய் இறைவனொருவன் உண்டென்பது பொய் என்பதாம்,

யோகம்.

யோகமதமாவது:-நிலம் முதற் புருடன் ஈறாகிய இருபத்தைந்து தத்துவங்களும் பெத்த முத்திகளும் நீதிக்கேதுவாம், இருபத்தாறாந் தத்துவமாக இறைவன் ஒருவன் உளன். அவன் முற்றுணர்வுடைய

வனும் சாத்திரங்களை அருளிச் செய்து புருடருக்கு ஞானத்தை அறிவுறுப்பன் என்பதாம்.

பாஞ்ச ராத்திரம்.

பாஞ்ச ராத்திரமாவது:—இருபத்து நாலாந்தத்துவமாகிய குண தத்துவத்தின்மேல் இருபத்தைந்தாந் தத்துவமாக வாசுதேவனென்று ஒருவனுளன். அவனிடத்தினின்றும் கண்ணன், அநிருத்தன், மக ரத்துவசன், இரௌகினேயன் எனும் நான்கு வியூகர்கள் தோன்றினார்கள். அவர்களால் சடமுஞ் சித்துமாகிய எல்லா உலகமும் படைக்கப்பட்டன, ஆகலான் உலகமெலாம் வாசுதேவன் பரிணாமமேயாம். இங்ஙனங் கூறும் பாஞ்சராத்திரத்தினன்றி வேதங்களினுறுதிப்பய னுண்டாகாது. பாஞ்சராத்திர முறையே தீக்கை பெற்று வாசுதேவனை வழிபட்டு வாசுதேவனுருவில் இலயமாதலே முத்தி என்பதாம்.

அகப்புறச்சமயம்.

பாசுபதம்.

பாசுபதவாவது:— ஆன்மாக்கள், பலவாய் நித்தமாய் வியாபக மாய்க் காரிய காரணக் கூட்டரவாற் றோன்றும் ஞானத்தாற் றனித் தனி வேறாயுள்ளன. இவ்வான்மாக்களுக்கு ஆணவமலம் என்ப தொன்றில்லை. மாயை, கன்மம் என்றிரண்டால் பந்தமுற்று இன்பத் துன்பங்களை அனுபவிக்கும். இவற்றின் உவர்ப்புத் தோன்றிச் சாத் திர முறையானே தீக்கை பெற்றவன்பால் ஈசனுடைய ஞானம் போய்ப்பற்றும். அப்போது குடும்பத்தின் பாரத்தைப் புத்திரர்பால் வைத்தொழித்துத் துறவறத்திற் செல்வார்போல ஈசனுந் தன்னு டைய குணங்களை அவன்பாற் பற்றுவித்துத் தான் அதிகாரத்தி னொழிவு பெற்று இருப்பன். இதுவே முத்தி என்பதாம். பாசு பதத் துக்குச் சங்கிராந்த வாதம் எனவும் பெயர் உண்டு.

மாவிரதம்.

மாவிரதமாவது:-மேற் கூறிப்போந்த இயல்பையுடைய ஆன்மாக் கள் அவ்வாறே பந்தமுற்றுச் சுகதுக்கங்களை அனுபவிக்கும். சாத் திரத்திற் கூறும் முறையே தீக்கை பெற்று எலும்பு மாலையணிதல்

முதலிய சரியைகளின் வழுவாதொழுகினவர் முத்தராவார். முத்தருக்குச் சிவனோடு சமமான எல்லாகுணங்களும் உற்பத்தியாம் என்பதாம். மாவிரதத்துக்கு உற்பத்தி வாதம் எனவும் பெயர் உண்டு.

காபாலம்.

காபாலமாவது:—ஆன்மாக்களியல்பும் பந்த வியல்பும் மாவிரதர் கொண்டவாறேயாம். சாத்திரமுறையே தீக்கைபெற்றுப் பச்சைக் கொடி ஒன்றைக்கைக்கொண்டு நாடோறும் மனிதர் தலையோட்டில் ஐயமேற்றுண்ண வேண்டும். இங்ஙனம் ஒழுகியவர்பாற் சிவனு வேசித்தலால் எல்லாக் குணங்களும் பெற்றுச் சிவசமமாவர் என்பதாம். காபாலம் ஆவேச வாதம் எனவும் பெயர் பெறும்.

வாமம்.

வாமமாவது:—பாற்கரியன் கூறியவாறே சடமுஞ் சித்துமாகிய அனைத்துலகும் சத்தியின் பரிணாமமே. வாம நூலில் விதித்த முறையே ஒழுகிச் சத்தியில் இலயித்தலே முத்தி என்பதாம்.

வைரவம்.

வைரவமாவது:-பெரும்பாலும் வாம மதத்தோடொத்துச் சிறுபான்மை ஆசாரங்களான் வேறுபட்டு வயிரவனே பரம்பொருள் எனக்கொண்டு வைரவ பதத்திற் சேர்வதே முத்தி என்பதாம்.

அயிக்கவாதம்.

அயிக்கவாதமாவது:—ஆணவமலமென்ப தொன்றில்லை. மாயா கன்ம மலங்களே உள்ளன. சுத்தராயுள்ள ஆன்மாக்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கீடாக முதல்வன் உடம்பு முதலாயினவற்றைக் கூட்டுவிப்பன். அவற்றாலே ஆன்மாக்கள் புண்ணியபாவப் பலன்களாகிய இன்பதுன்பங்களைப் புசிக்குமிடத்து, இதாகிதங்களைப் புரிந்து மேலும் புண்ணிய பாவங்களை ஆர்ச்சித்து, அவற்றிற்கீடாகப் பிறந்திறந்துழலும். இங்ஙனம் உழன்று வரும்போது கன்மங்கள் துலையொத்த ஆன்மாவுக்கு முதல்வன் தனது கருணையால் அந்தக் கன்ம மாயாமலங்களைப் போக்குவன். மாயா கன்ம மலங்களை நீங்கி ஆன்மா பழைய சுத்தத்தை யடையும். இதுவே முத்தி என்பதாம்.

இதுதான் துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவர்கொண்ட வீரசைவம்.

அகச்சமயம்.

பாடாணவாதம்.

பாடாணவாதமாவது:—ஆன்மாவிற்கு ஆணவமலம் குணம் போலச் சகசமாய் அநாதியே உள்ளது. அதனால் மாயை கன்மங்கள் ஆன்மாவைத் தலைக்கூடும். இறைவன் இருவினைக்கீடாகச் சரீரங் களைக் கொடுப்பன். ஆன்மா அவற்றைப் பொருந்தி இன்ப துன்பங் களை நுகரும். அப்பொழுது கண்ணொளியைக் காசபடலம் மறைத் தாற்போல ஆன்ம சைதன்னியத்தை ஆணவமலம் மறைக்கும். அதனாற் பிறவித் துன்பம் அதிகரிக்கும். பாசஞானமெல்லாம் தன் கீழ் வியாப்பிய மென்றறிந்து அவற்றின் நீங்குதன் மாத்திரையே முத்தி. முத்திபெற்ற வழியும் ஆன்மாச் சகசமலம் நீங்குதலின்றிச் சுட்டறிவுஞ் சுகதுக்காநுபவமும் அற்றுப் பாடாணம்போற் கிடக் கும் என்பதாம். இது பாடாண முத்தி.

பேதவாதம்.

பேதவாதமாவது:—ஆணவம், கன்மம், மாயை என்னும் மூம் மலங்களுஞ் செம்பிற் களிம்புபோல் ஆன்மாக்களுக்கு அநாதியே உள்ளன. அவற்றால் ஆன்மாச் சுகதுக்கங்களை அநுபவிக்கும், கா ணங்களிற் சென்ற தன்னறிவு பக்குவம் வந்துழித் தன்மாட்டு வந் தொன்றி நிராதாரமாய் நிற்கும். ஆன்மா இறைவன் திருவருளால் மும்மலங்களும் நீங்கிப் பெறுவானும், பேறுமாயி நக்கும். இதுவே முத்தி. அதன்மேலும் அடிமையாதலில்லை என்பதாம். இது மலம் போம் முத்தி.

சிவசமவாதம்.

சிவசமவாதமாவது:—பதிஞானம், பசுஞானம், பாசஞானம் என் னும் மூன்றும் அநாதியே உள்ளன. பாசஞானமாகிய இந்திரியங்கள் விடயங்களை விளக்கப் பசுஞானம் அவற்றைப் புசிக்கும். இவ்விரு ஞானங்களும் நீங்கியவழி ஆன்மாச் சுவாலையின்றிக் கிடக்குந்தழல் போல ஒன்றையுஞ் சுட்டியறியாது அறிவு மாத்திரையாயிருக்கும், அப்பொழுது, வேட்டுவன் புழுவை எடுத்துக்கொள்வது போலப் பதிஞானம் ஆன்மாவை எடுத்துக்கொள்ளும். புழு வேட்டுவனை நினைந்து அதன் வடிவாதன் மேலும் அதன் றொழிலையும் இயற்றி

நிற்றல்போல ஆன்மாவும் அப்பதியை நினைந்து அதன் வடிவாதன் மேலும் அதன் றொழிலையும் இயற்றி நிற்கும் என்பதாம். மாயாவுடல் தானே இங்ஙனம் நித்தியத்தைப் பெற்றிருப்பது முத்தி என்றதனால் இது விக்கிரக நித்த முத்தி எனப்பெறும். திருவண்ணாமலை ஞானப் பிரகாச முனிவர் கொண்ட மதம் இதுவே.

சிவசங்கிராந்தவாதம்.

சிவ சங்கிராந்த வாதமாவது:—ஆன்மாவின் சந்நிதியிற் காந்த பசாசம் போல உடல் இயங்குழி அதன்கணின்று கருவிகளே விடயங்களை அநுபவிக்கும். மலம் நீங்கும் வழிக் கண்ணாடியின் முக வொளி தோற்றுமாறுபோல முதல்வன் றிருவருள் ஆன்மாவின் மாட்டுச் சங்கிரமித்துத் தோன்றும். அவ்வழி உப்பளத்தி விட்டவை யெல்லாம் உப்பாமாறுபோல ஆன்மாச் சிவமேயாய் அவ்வான்மாவின் சந்நிதியில் அறிவனவாகிய பசுகரணங்களுஞ் சிவகரணங்களாய் மாறுகிற சித்தியுற்றுச் சிவத்தை அறியும் என்பதாம். ஆகலான் இது சித்தி முத்தி எனப்பெறும்.

ஈசுரவவிகாரவாதம்.

ஈசுர வவிகாரவாதமாவது:—பலதுளைகளையுடைய குடத்திலேற்றிய தீபத்தைப்போல நவத்துவாரங்களையுடைய உடம்பில் ஆன்மாவானது அறிவாய் நிற்கும் அவ்வாறு நிற்பினும் பொறிகளோடு அவ்வவற்றின் அளவாய்க் கூடி விடயங்களை அறியும். அது மலபரிபாகமுஞ் சத்திநி பாதமுஞ் சேர்ந்தபோது முதல்வன் றிருவருளால் ஞானத்தைப் பெற்று முதல்வன் றிருவடி நீழலைத் தலைக்கூடும். அதன் பின்னர் முதல்வனது உபகாரத்தை விரும்பாது என்பதாம்.

சிவாத்துவிதம்.

சிவாத்துவிதமாவது:—பதி பசு பாசங்களினியல்பும், தத்துவங்களின் தோற்ற வொடுக்கங்களும், அஞ்சவத்தைப்படும் வேறுபாடுகளும், அனைத்துஞ் சித்தாந்த சைவரோடொப்பவாகும், பசுபாசங்கள் பதிவியாபகத்தில் வியாப்பியமாய் நிற்றலால் அவை தனிமுதலன்று. அவற்றிற்கும் பதிக்குமுள்ள பேதம் குணகுணி பேதத்தைப்போல உட்பேதமேயன்றி புறப்பேதமில்லை; கவடு கோடுகளெல்லாம் மரமாமாறுபோல அனைத்தும் சத்தே பசுவுக்கு அறியுந்

தன்மையில்லை. ஆன்மாவினிடமாக நின்றறிவது சத்தாகிய சிவமே என்பதாம். இதுவே கண்ணுடைய வள்ளலும் நீலகண்ட வாசிரியரும் கொண்ட கொள்கை.

நிமித்தகாரணமாகிய முதல்வன் மாயையோடுங்கூடி முதற்காரணமுமாய்ப் பரிணமிப்பன் என்பதே, சிவாத்துவிதர் கொள்கையாகலான், சிவாத்துவிதத்துக்கு நிமித்த காரண பரிணாம வாதமெனும் பெயர் உண்டு.

ஈண்டுக்கூறப்பெறாத சமயங்களாகிய துவிதவாதம், கௌரமதம், சௌமியமதம், பாணினி மதம், இரணிய கருப்பமதம், ஸ்மார்த்தமதம், பௌராணிகமதம், கௌளமதம், யாமளமதம் முதலியவையெல்லாம் கூறியவற்றின் பகுதியாய் இவற்றுள்ளே அடங்கும்.

இங்ஙனம் கூறப்பட்ட புறப்புறம், புறம், அகப்புறம், அகமெனும் நான்குவகைச் சமயங்களுக்கு வேறாயது சைவசமயமாகும்.

பஞ்சாட்சரபுரம் வாலையானந்தம்.

சரவணபவர் பிரபாவம்

அல்லது

முருகர் திருவிளையாடல்கள்.

(520-ஆம் பக்கத்தொடர்ச்சி)

ஈசானன் விறகு வெட்டிக்கொண்டு வந்தான். வருணன் தண்ணீர் தெளித்தான். இயமன் மாடு மேய்த்தான். நிருதி பேரிகை அடித்தான். சூரியன் விளக்கேற்றினான். சந்திரன் இங்கும் அங்கும் ஓடிக்குற்றேவல் செய்தான். பிரமன், தனது மனைவியாம் சரசுவதியோடு முனிவனாக உருமாறித் தோணிபுரம் என்னும் சீகாழிக்குச் சென்று சிவபூசை செய்து கொண்டிருந்தான். அதனால் அப்பதிக்குப் பிரமபுரம் என்று பெயர் வந்தது. விஷ்ணுமூர்த்தி அவனுக்குப் பயந்து, வைகுந்தத்தைவிட்டு நீங்கி, மீன் வடிவெடுத்துக் கடலில் வீழ்ந்து வாழ்ந்தார்.

அது தெரிந்த தாரகன் வைகுந்தஞ் சென்று, அங்குள்ள சித்திர சபையில் அமர்ந்திருந்து அரசாண்டான். அப்போது அங்கு அவனுக்கு எல்லாரும் அஞ்சி நடுங்கினார்கள்.

இப்படி வருந்திய தேவர்கள், யாவரும் திருக்கயிலாயஞ் சென்று சிவபிரானை வணங்கி,

ஐயனே! ஐம்முகத்துய்யனே! தீவண்ணச்
செய்யனே! யிருநான்கு கையனே! அன்பர்க்கு
மெய்யனே! மாதமரு மெய்யனே! அணிதிகழ்
பையனே! வன்பர்க்குப் பொய்யனே! அடியேம்
தாரகன் தன்னால் தாங்கொணுத்துன்பம்
அனுபவிக் கின்றோம். அதனை
இன்னே தவிர்த்தெமை ஈடேற்றுவாயே! (நூலாசிரியர்.)

என்று ஏத்தித் தொழுது வேண்டினார்கள். சிவபிரான், அவர்கள் துன்பம் துடைக்கத் திருவுளங் கொண்டருளினர். ஆகையால் உடனே அவருடைய இதயத்தினின்றும், ஆறுமுகமும் பன்னிரு விழிகளும் கொண்டதோர் திருவுருவம் தோன்றிற்று. அதற்கு வலப்பக்கம் ஆறு திருக்கரங்கள் இருந்தன. ஒரு கரம் அபயகரமாயிருந்தது; ஒன்றில் வாள் இருந்தது; ஒனறில் சூலம் இருந்தது; ஒன்றில் சக்கரம் இருந்தது; ஒன்றில் முசலம் இருந்தது; ஒன்றில் வேல் இருந்தது; அதற்கு இடப்புறம் ஆறு திருக்கரங்கள் இருந்தன. ஒன்று வரதகரமாயிருந்தது; ஒன்றில் கொடி இருந்தது; ஒன்றில் கேடகம் இருந்தது; ஒன்றில் அங்குசம் இருந்தது; ஒன்றில் பாசம் இருந்தது; ஒன்றில் குலிசம் இருந்தது. அவ்வுரு ஜக ஜோதிமயமாய் கோடி சூரியப் பிரகாசம்போல் விளங்கிற்று. அதன் அழகை நோக்கி வியந்த சிவபெருமான் ஏ! சுப்பிரமண்ய! மைந்த! $ தாரகனை வதைத்துத் தேவர்கள் துன்பத்தை நீக்கக் கடவாய் என்று கட்டளையிட்டனுப்பினர். அப்படியே குகப்பெருமான் படைகளோடு சென்று தாரகனை எதிர்த்துப் பத்து நாள் சண்டைசெய்து கொன்று வென்று, தேவர்களை முன்போல் அவர்கள் உலகத்தில் இருத்திக் காத்தருளினர். தாரகாசுரனை அழித்தமையால் அவர்க்குத் தாரகாந்தக மூர்த்தி யெனும் திருநாமம் உண்டாயிற்று:-

திவான் பகதூர் S. பவானந்தம் பிள்ளை, எம். ஆர். ஏ. எஸ்., ஐ. எஸ். ஓ.

$ இவன் இருந்த இடம் திருக்கூவமென்று அந்தத் தலபுராணம் கூறுகின்றது. இவனுடன் போர்செய்த இடம் போரூர், திருப்போரூர் என்கிறார்கள். போர் நடந்த இடமகையால் போரூர் அல்லது சமரபுரி யென்பது காரணப்பெயர். இது தொண்டைநாட்டில் செங்கற்பட்டிக்குச் சமீபத்தில் உள்ளது, கூவமும் இப்படியே.

கௌரி சங்கரான்.

(516-ஆம் பக்கத்தொடர்ச்சி)

சுமார் ஒரைம்பதின்மரும் ஆயிடை நுழைந்தனர். உடனே, யனைவருங் காலந்தாழ்த்தலின்றி யுணவு கொள்வான் புக்கனர். புக்குழி, நிகழ்ந்த சம்பாஷணையில், கௌரியைப்பற்றியே எண்ணிக்கொண்டிருந்த சங்கரான், இறைவர் தம் வினாக்களுக்கு விடை சொல்லத் தாழ்த்தும், மீட்டும் வினவியும், ஒன்று கிடக்க வொன்று சொல்லியும் மயங்கினன். அது கண்ட தந்தையும் இளநகை யரும்பி வாளாதிருந்தனர். இவ்வாறு நஞ்செம்மல் மயக்கெய்தக் காரணமின்னதென்றுணரவியலாது ஆண்டைய அனைவரும் வாளாதிருந்தனர். இன்னுஞ் சின்னேரத் தன்னுரொருங்கே யெழீஇ தங்கட்குதவிய புனல்கொடு கரங் காலாதிய தூய்தாக்கி அவண்விட்டு வெளிப்போந்தனர். போயவருட் சிலர் புத்தகங்கொண்டனர்; சிலர் இராமச்சந்திரனுக்கு நால்வரும் வாலிக்கு நால்வருமாகப் பிரிந்துட் கார்ந்து தருக்கந் தொடங்கினர். சிலர் யாழ், மத்தளம், வேணுமுதலாய வின்னிசை வாத்தியங்களோடு குழுவினரொருபால்; அக்குழாத்தினுள்ளொருவர் பல கிண்ணங்களை எதிரில் வைத்து ஒவ்வொன்றிலுந் தண்ணீர் பெய்து இருகரங்களினு மிரு சிறுகோல் கொண்டு தட்டித் தட்டிப்பார்த்து ஒன்றிலிருப்பதைக்குறைப்பதும் மற்றொன்றில் கூட்டுவதுமாயிருந்து "சின்னேரத்தில் ஆரம்பிக்கலாமே" என்றார். சதுரங்கம் வைத்தமர்ந்தனர் சிலபேர், சொக்கட்டான் விரித்துச் சொக்கினர் சிலபேர், ஒருவர் பைரவி ஆலாபனம் செய்தார். "நன்று நன்று!" எனச்சிரந் துளக்கினர் பலர், இன்னணம் பலருங்காலத்தைக் கொல்லற்கான பலதுறைகளிற்புகுந்தனர். இறைவர் எந்தக்குழுவினுள் சேர்வரோவெனவையுற்று, தம் வலையில் வீழ்த்திப் பொன்பறித்தற்கு அவையினுட் சிலரை, நடனமிடுங்கால், கடைக்கண்ணால் நோக்கும் தாசிகள் போன்று, கடைக்கண்ணால் அவரையே நோக்கினராய் வெகு உற்சாகத்தோடு தந்தொழிற்களை யியற்றுவான் றொடங்கினர், அவரேதோ வொன்றனைக் கருதி புன்முறுவல் கொள்ளின் "எம்பாட்டில் பரவசமெய்தினர்," எனப்பாடுநரும், "எம் வீணையில் சொக்கினர்" என வீணைவாச்சியரும், "எமது மனோதர்மத்திலீடுபட்டார்" என மத்தளந் தட்டுநரும், இன்னணமே இறைவர் தத்தமக்கு வசப்பட்டதாக ஒவ்வொரு துறைபோயவரும் நினைந்து மேலும் மேலும் உற்சாகங்கொடு தம்வினைகளை நடாத்தினர். இவரின்னணமிருக்க எம்

நுதல்விழி நாட்டத்திறைவர் ஒரு பொன்னிருக்கையிலமர்ந்து ஏதோ யோசனையிலாழ்ந்து வாட்டமுற்ற முகத்தினராய் வாளாதிருந்தனர். சங்கரனோ இவர் தம்முளெவரையுமே கவனியாது தான்தனித்து ஓரறையினுட் புகுந்தமர்ந்து ஏதோ எண்ணமிட்டிருந்தனன். இன்னணம் ஆழ்ந்த சிந்தனைக் கடலுளாழ்ந்து வெளியுணர்வழிந்திருக்குமப்போழ்தத்து கடிகாயந்திரம் பதின்முறை முழங்கிற்று. அவன்றன் சலனமற்ற யோகநிலையை நாதமாம் மணியோசை சலிப்பித்தலும் பொள்ளென வெழுந்து போந்தனன் பொங்கெழிற் குரிசில். முன்னர் யாங்கூறியுள்ள உய்யானவனத்திடை மண்டபம் வந்தடைந்தான். நான்கு திக்குகளினும் கட்புலனுக் கெட்டியவரையில் பார்த்தான். முகம் முன்னினும் அதிகமாய் வாட்டமுற்றது. அம்மண்டபத்தினுட் பெரிதுஞ் சிறிதுமாய ஈரிருக்கைகளிருந்தன. அவைதம்முட் பெரிய விருக்கையின் கண்ணமர்ந்து தூங்காது தூங்கினன். சிலவிநாடிகளில் ஓர் மங்கைப்பருவத்து வனப்பினள் ஆங்கு மெய்து வண்டண்மினள். அவளது காலணிகள் கட்டியங்கூறி யாங்கொலித்தன. இவ்வோதையால் விழிப்புற்றனன் சங்கரன். விழித்தவன் றன்முன் விஞ்சையள் போன்றொருவள் நிற்பதைக்கண்டு இம்முக முடையாளை இதே நிலைமையில் இவண் இதுகாறும் பார்த்திலாமையின் திடுக்கிட்டெழுந்து "யாரம்ம நீவிர் என்கருதி யிவணடைந்தீர்கள்? தம்மனுலாக வேண்டிய தேதேனுமுளதோ?" என்று வெகு வினயத்துடன் வினயினன்.

அன்னளும் "இன்னும் நம்மைக்காத்தல் நேரிதன்று" எனவுன்னி, சீரிய! என்னையே தங்காதலியின் தோழி ஊர்மிளையென்ப. எனது சீமாட்டி ஏவலால் ஈண்டணமினேன், நீவிர் இராருமின்புறற்கு அடியாளால் ஆகவேண்டுவ துளவாயின் அதனையே இப்பிறப்பில் யானடையத் தக்கதோர் பெரும் பேறெனக் கொள்வேன் என்று நவின்றனள். நம் செல்வனும் ஏதேதோ நவின்றனன். இன்னணம் இவ்விருவரும் வெகுவாய்ப் பேசிக்கொண்டிருந்தனர்.

அத்தியாயம் 5.

இன்று காரைக்காலில் கரிகாரர் தெருவென்று வழங்கப்படும் வீதி நாலைந்து நூற்றாண்டுகளுக்கு முன்னர் இன்றைய நிலையில் இருக்கவில்லை. அவ்வீதியில் வதிந்தவர் மாளிகை முகப்பெலாம் யானைகள் சட்டப்பட்டிருந்தமையின் அவ்வீதி கரிகாரர்வீதி யென்றழைக்கப் பட்டது. அவ்வீதியி னிருமருங்கினும் செறிந்த வெண்சுதை தீற்றிய மாடங்களினும்பர்பிறை மதிதவழ்தலானும், இடையே சூற்கொண்ட கரியமேகங்கள் தவழ்தலானும் அம்மாடங்கள் சிவபிரானை யொத்திருந்தன, அந்நிதித் திங்களையே நீறு செய்து பூசப்பெற்றதை யொத்த நீண்மாடங்கள் தவச்சின்னமாய வெண்ணீறணிந்து குழுமிய அடியார் தமையு மொத்திருந்தன. அம்மாடங்களின் மேனிலைச் சாளரங்களின் புறத்தே இலங்கும் வெண்ணிலா, அன்பார் தங்கல்வியைத் திளைத்து அவர் தம்மார்பிடைத் துயிலும், மகளிரது வனப்பினைக் காந்து நின்று கவர்வதை யொக்கும் அவ்வீதியில்.

"வருவிருந் தெதிர்கொண் டேற்று நயனுரை வழங்கு மோசை
யருகிருந்தடி சிலூட்டி முகமனன் கரையு மோசை
யுரைபெறு தமிழ்பாராட்டு மோசைகேட்டு வகைதுள்ள
விருநிதி யளிக்கு மோசை யெழுகட லடைக்கு மோசை"யாய்

நிறைந்திருக்கும் இன்னு மவ்வீதியில்

"தேரொலி கலினப்பாய் மாசிரிப் பொலிபுர விதாண்ட
தாரொலி கருவிபைந்து தழங்கொலி முழங்கு கைம்மான்
பேரொலி யெல்லா மொன்றிப் பெருகொலி யன்றி யென்றுங்
காரொலி செவிமடாது"

"அருந்தின ரருந்திச் செல்ல வருந்து கின்றூரு மாங்கே
யிருந்தினி தருந்தாநிற்க வின்னமு தட்டுப் பின்னும்
விருந்தினர் வரவு நோக்கி வித்தெலாம் வயலில் வீசி
வருந்தி விண்ணோக்கு மோரேருழவர்போல் வாடிநிற்பார்"

ஒவ்வோரில்லின் முகப்பின் கண்ணும் மாதரார் கண்டீர்.

"ஊடினார் நெகிழலன் களு மம்மனையுடன் பந்
தாடினார் புரியாரமு மடியினார் சிற்றில்
சாடினாரொடு வெகுண்டு கண்டதும்பு முத்திறைப்ப
வாடினார் பறித்தில மாலையுங் குப்பை" யாய்ப்பொலியும்

அவ்வீதியினிரு மருங்கினும்.

இத்துணைப் பொலிவு வாய்ந்த அவ்வீதி இப்போது எழிலி ழந்து தோன்றுதல் காலம் என்ற ஓர் கருமான் செயல்போலும்.

அவ்வீதியின் ஒரு சிறு மாளிகையினுள்ளோர் அறையில் ஒரு மங்கைப்பருவத்து மாதராள் பலகையொன்றின் மீது விரித்திருந்த பாயலின் மீது படுத்திருந்தாள். அவள் முகம் பனிக்கட்டிபோல் வெளுத்திருந்தது. கண்கள் ஒளியிழந்து பஞ்சடைந்து ஆழ்ந்திருந் தன. கருத்து நீண்ட சுரிகுழல் சிக்குப்பட்டு சீண்டல் நாறியது. அதினின்று பேனெனும் புழுக்கள் அளவிலனவாய் சொரிந்த வண்ண மிருந்தன. சரீரம் உள்ளென்புகளை யெண்ணத் தக்கவாறு மெலிந் திருந்தது. அவள் பக்கலில் வெண் துகில் தரித்த விருத்தரல்லாத வோராடவர் குஞ்சியென்னுங் கோதறுதலையினர், சற்று நீண்ட காத்தினர், நின்றுகொண்டு படுத்திருப்பவள் முகத்தையே கண் ணிமையாது பார்த்துக்கொண்டிருந்தனர். கணத்திற்குக் கணம் அவ்வெழிலுலர்ந்த வதனம் மாறுதலடையாநின்றது. தேகத்தி னும் மனத்தினும் நிகழ்வன வற்றை யொருங்கே யம்முகம் இனிது விளக்குதல் போரச்சரியம். இவர்களைச் சூழ்ந்து இருபானீராட் டைய னெனத்தக்க வோராண்மகனும் 55, 60, பிராயத்தினள் என மதிக்கத்தக்கவோர் விருத்தையும் நின்றுகொண்டிருந்தனள். அவ்விரு த்தையின் கண்கள் கங்காநதியின் ஊற்றுக்கண்களை யொத்திருந்தன. உதடுகள் அசைந்த வண்ணமிருந்தன; அபாயத்திலிருக்கும் தன் மகளை மீட்டுந் தனக்களிக்க வேண்டுமென்று முழுமுதற் கடவுளை இறையாதிறைஞ்சுகின்றாற்போலு மவ்விருத்தை. வாலிபனோ செய லற்று நின்று வெய்துயிர்த்தனன். அவன் முகமும் படுத்திருப்ப வள் வதனமும் ஓரே சார்பையுடைமையின் அவ்விராருஞ் சோத ரரென்றே சொல்ல வேண்டும். வாலிபன் முகத்தைவிட விருத்தை யின் முகம் பிணியாளியின் முகத்தோடு பெரிதும் பொருத்தமுடை மையின் அவள் மற்றிருவரது அன்னையென்றே யூகிக்க வேண்டி யிருந்தது. படுத்திருப்பவள் முகத்தையுற்றுநோக்கிக்கொண்டிருப்ப வர் சிலவினாடிகளுக் கொருமுறை நோயாளியின் அங்கையினுக்கருகில் சுட்டுவிரல், நடுவிரல், மோதிரவிரலாய மூன்றினாலும் பற்றிப்பற்றிப் பார்த்தவண்ணமிருந்தனர். அவரது முகம் இயற்கையில் சிவகலைநிறைந் திருப்பினும் அப்போழ்தத்து மிக வாட்டமுற்று ஆழ்ந்திருந்த எனை யோரது துக்கத்தினையெல்லாம் ஒருங்கு சேமித்துக் காட்டியது. தாயுந் தனயனும் இவர் முகத்தையும் பிணியாளியின் முகத்தையும்

மாறி மாறி நோக்குநராயிருந்தனர். இவரோ நோயாளியின் முகம் ஒன்றனையே நோக்கிய வண்ண மிருந்தனர். படுத்திருப்பவள் முகம் வேறுபாடுகளுக்கியைய இவர் முகமண்டலமும் வேறுபட்டு வந்தது. இவ்வாறு சில நாழிகைகள்சென்றன. திடீரென சிகிச்சையாளர் முகத்தில் புன்னகை தோன்றியது. தோன்றவே முகமெல்லாம் மலர்ந்தன. "இனி யஞ்சன்மின் தங்கள் பெண் உலகத்தில் இன்னும் பல்லாண்டுகள் உலாவித்திரிதரற்குக் காலங்கிட்டியது. அம்மணீ! தங்கள் புதல்வியைத் தங்களோடு விடுதற்கிசைந்த இறைவன் திருவருளை யிறைஞ்சி யேற்றுக". பிரணவப் பெருந்தகையைச் சிந்திப்பார்க்கும் பயமென்பதுண்டு கொல்? "புழைக்கைப்புங்கவன் பொன்னடி தொழுவார்க் கிறப்பவந்தறினும் இடர்ப்படா துய்குவர்" என்பது மேலோர் வழக்காகலான் நுங்கட்கு எவ்வித குறைபாடும் நேராது கண்டீர். "இறைவனது பொருள் சேர்புகழ் புரிந்தார் மாட்டு இருள்சேரிரு வினைகள்சேரா." இனி நீவிர் துயருறுதீர்கள். குணபூடணி முற்றும் குணமடைவள். அன்னளுக்கு நோயொன்றுமிலது. ஆற்றொணுக் கவலையால் அகங்கரைந்துருகுவாளது பலமுற்றும் ஒழிந்து இறுதியில் இரக்தாசயப்பை தன் றொழிலினை இயற்றவியலாது போயது. போகவே, இரத்தம் சரீரத்திற் பரவ ஏதுவில்லாமல் போய்விட்டது. தருணசஞ்சீவியை சற்று தாமதித்துக் கொடுத்திருப்பின் நம்பெண்ணை இதுகாறும் பிணமாகவே காண நேர்ந்திருக்கும். இப்போழ்தத்து உதிரப்பை தன் றொழிலை வழக்கமான பரபரப்புடன் செய்வான் றொடங்கியது; என்று மெல்லிய குரலில் மொழிந்தனர் சிகிச்சையாளர்.

பெருமாட்டி:—எங்குடும்பத்திற்கே வழித்துணை மருந்தெனத்தோன்றிய வாலையானந்த வள்ளலே! நுந்திருவருளுள்ளளவும் எமக்குக் குறைபாடுளதாமோ? இவள்......

என்று பேச வாயெடுக்குமுன்னர் நந்தம் பெருந்தகையார், "இங்கு நாம் வசனித்தல் சாலாது. குணபூடணியைத் தனியே இளைப்பாற விடுதலே சால்புடைத்து. அவள் உணர்ச்சியுற்றெழுதற்கு இன்னும் அரையணி நேரம் செல்லும். கொஞ்சம் பசுவின் பாலட்டு கற்கண்டு சேர்த்து தயாராக வைத்திருங்கள். சற்று வேறிடஞ் சென்று வசனிப்போம்" என்று பின்முகமாய்த் திரும்பி நடந்தனர். இளைஞனும் பெருமாட்டியும் உடன் சென்றனர், முற்கட்டில் ஒரு விசாலமான கூடத்தில் போடப்பட்டிருந்த இருக்கைகளிலமர்ந்தனர்.

அப்போது வாலிபன், வாலையானந்தரைப் பார்த்து "யாங்கள் எனது சகோதரி பக்கத்தில் தங்களோடிருக்க தங்களுக்கு மனமில்லாதது போல் தங்கள் முகக்குறிப்பாலுணர்ந்தேன். அன்னணம், தாங்கள் உன்னுதற்குக் காரணமென்னை?

வாலையானந்தர்:—நன்று வினவினை. சலிக்குந் தன்மையுள்ளாரும் மனக்கிலேசப் படுபவரும், சிறியதைப் பெரிதெனக் கொள்ளுஞ் சிறியரும், நெருங்கிய சுற்றத்தவரும் பிணியாளர்தம் அறையினுள் எஞ்ஞான்றும் புகுதல் கேடு பயக்கும், என்னை?

நஞ்சிரத்தின் கண்ணுள்ள மூளையே நம் எண்ணத்தின் இருக்கைத்தானமாம். அது சீவன் நிற்கும் இடமாகவும்; யோசனை யுண்டு பண்ணும் இயந்திரமாகவும் இராநின்றது. அநேக நரம்புகள் வாயிலாய் மூளை சரீரத்தின் சகல அவயவங்களோடும் சம்பந்தப்பட்டிருக்கின்றது. மனமெனும் அந்தக்கரண வாயிலாய் இம்மூளையின் வழியே சரீரத்தின் எவ்வுறுப்புக்களையும் சலிப்பித்து சுகதுக்கங்களை ஆன்மா நுகர்ந்து வருகின்றது. ஆன்மபோதத்தாற் றூண்டப்பட்ட அம்மனம் நமதுமூளையின் முற்பகுதியின் உணர்ச்சி நரம்புகளோடு சம்மந்தப்பட்டு ஏனைய கருவிகளுடன் கூடி நெற்றி மத்தியில் நின்று தொழிலியற்றின் அவ்வவத்தை சகல சாக்கிரம் என்றும், பிற்பகுதியாகின்ற பின் மூளையோடு சேர்ந்தால் அவ்வவத்தை சகல சொப்பனம் என்றும், கடைப்பாகமாம், அடி மூளையோடு தொடக்குண்டு அசைவுறின் அவ்வவத்தை சகல சுழுத்தி யென்றும் பெயர் பெறும். இன்னணங்கூறிய மூளையின் மூன்று பகுதிகளிலும் முற்பகுதியே மற்றிரண்டினும் பெரிதாம். இதினின்று புறப்படும் நரம்புத்தொகுதிகள் பஞ்சேந்திரியங்களையும் ஆள்கின்றன. நாம் விழிப்புநிலையிலிருக்கும்போது சாதாரணமான வினைகளியற்றும் போதும் இம்முதன் மூளையின் மூலமாகவே சகலயோசனைகளும், கிரியைகளும், நடத்தப்பெறுகின்றன. இது உலகத்திலுள்ள ஒவ்வொரு விடயத்தையும் ஆய்ந்துணர்ந்து பின்னர் தான்செய்த முடிவுகளை பின் மூளையில் சேமித்து வைக்கின்றது. நாமொன்றனைக் காணும் போழ்தும், பிறரோடு வசனிக்கும் போழ்தும், முன்மூளையிலுள்ள உணர்ச்சி நரம்பைப்பற்றிய புறமனத்தையே யுபயோகிக்கின்றோம்.

சகல சுழுத்தியின் போதும் சகல சொப்பனத்தின் போதும் புறமன மடங்கும். அன்னணமஃதடங்கவே, அதன் துணையான

சிவசக்தி பின்புறமாகக் கீழிறங்கி பின் மூளையில் செல்கின்றது. இந்த சக்திக்கு உதவியாயுள்ள மனத்தின் பகுதியே உண்மனமெனப்படுவது. சகல சொப்பனுவத்தையின் போதும், ஆழ்ந்த சிந்தனையின்போதும் சகல சுழுத்தியில் தூங்காமல் தூங்கும்போதும் நம் முன் மூளையில் பீடம் வகிக்கும் உண்மனமே சலிக்கின்றது. இது கண்ணில்லாது பார்க்கவும், காதில்லாது கேட்கவுங்கூடிய தன்மை வாய்ந்தது. பல்லாயிரங் காவதங்களுக்கப்பால் நடக்கும் கிரியைகளையும், ஆண்டிருக்கும் பொருட்களையும் தெள்ளிதிற்காணுந் திறமை அவ்வுண்மனதினுக்குண்டு கண்டாய். ஆயினும், அந்நிலையில் அது பகுத்தறியுந் தன்மையுடையதன்று. ஒன்றை மற்றொன்றோடு ஒப்பிட்டுப் பார்க்கும் குணமும் இதற்கில்லை| கண்டாய், இவ்வுண்மனதை யோசனைக்குறிப்புகளால் வெகுஎளிதினில் வாசித்துவிடலாம். ஆகவே நோயுளான் வெளிமனமற்ற நிலையிலிருக்குந் தருணத்தில் அருகிலிருப்பவர் "அந்தோ! இவள் நோய் மிகக்கொடிது, இவள் பிழைத்தெழுாள், என் செய்வது?" எனவும், இன்னும் பிறவும் சிந்தித்தனராயின், இச்சிந்தனைகளை யொருங்கே கவர்ந்த நோயாளியின் உண்மனம் அவற்றை யுண்மையாகவே மதித்துத்தானும் நிச்சயமாய் நம்புகின்றது. அன்னணம் அது நம்பிய வளவில் வந்தது கேடு. உண்மனத்தின் சங்கற்பத்தினுக்கேற்ற வண்ணம் தேகம் திரிந்து விளங்கும். அதற்கு மாறாக, திடசித்த முள்ளார் "இந்நோய் மிகச்சாதாரணமானது. இது சிறிது நேரத்தில் குணப்படும். இதே நோயுடைய இன்னின்னார் சுகமெய்தினர். இது அத்துணைக்கொடிய நோயன்று; பயமில்லை. இன்று பொழுதுக்குள் (அல்லது இத்தனை மணி நேரத்தில்) வியாதிபடிந்து சுகமேற்படும்" என்று உறுதியான மனத்துடன் எண்ணினராயின் வியாதியாளர் குணமடைதல் வெகு சாதாரணம். ஆகவே, நீவிர் குணபூடணியின் மாட்டு வைத்த அன்புகாரணமாக அவள் பக்கத்திருந்து சதா பல் வேறு சிந்தனைகளால் கடுந்துன்பத்தினுக்கிலக்காய் அங்கலாய்ப்பீர். அதனைக்கண்ட அவள் தன் உண்மனம் தானும் மிகத்துக்கித்து தனக்குப் பேராபத்து வந்ததாய் மதித்து இடர்ப்பட்டு இறுதியில் தனக்கும் சரீரத்திற்கும் ஊறுசெய்தொழிந்திடும். ஆகலான் நீவிர் அவணிருத்தல் தகாதெனவுன்னினேன்.

வாலிபன்:—குருமணியே! மூளையின் மூன்று பாகங்களில் இரண்டினைப்பற்றியும், அவற்றிற் பீடம் வகிக்கும் வெளிமனம் உண்

மனமாய இருமனங்களைப் பற்றியும் விவகரித்த தாங்கள் மூன்றுவதாய் மொழிந்த அடிமூளையைப்பற்றி யாதும் நவிலாது விடுத்ததென் கருதியோ அவ்வடி மூளையின் தன்மைகளையும் ஒரு சிறிது விளக்கப்பிரார்த்தியா நின்றேன்.

வாலையானந்தர்:—யோகிகளின் சுதந்தரமாகிய இவ்வான்ம நிலையைப்பற்றித் தெரிந்துகொள்ளுவதற்கு உன்னாலாகாதென வெண்ணி அதைப்பற்றி விவகரியாது விட்டேன். நீ யதனை மீண்டுங் கிளத்தல் பற்றி யொருவாறு சுருக்கமாய் நவில்வேன், கேட்பாயாக.

இம்மூன்றும் பகுதியாம் அடிமூளை முதுகெலும்பினூடே செல்லும் மச்சையின் விரிவென்னலாம். இதுவே, குழந்தை கருப்பையிலுதய மாங்காலை முதன் முதறோன்றியதாகும். ஆகவே, சரீரம் முழுவதினுக்கும் இதுவே மூலாதாரம். இது சுமார் ஒரு கொட்டைப் பாக்கின் பரிமாணமுடைத்து. ஆயினும் இதன்றொழில் மிகுதியும் ஆச்சரியப்படத்தக்கது. இதுவே விலையறியா மாணிக்கம். இதுவே யான்ம நிலை. இதினின்றே ஞானவொளி வீசாநின்றது. யோகவித்தையில் கைபோய ஞானிகளே இதனைத்தம் விருப்பத்தின் படி சலிப்பிக்க வல்லவர். முற்கூறிப்போந்த நிணத்தின் றொழிலினை யடக்கியதனையு முறங்குவித்தால் அதன் சிவசத்தி இவ்வடி மூளையில் செல்லுகின்றது. சென்று, தன்னான்ம சத்திகளை விகசியா நிற்கும். இதன் முன் உலக அறிவு மங்கிப்போம். நாடிகள் உணர்தற் கேலா வண்ணம் நடக்கும். சுவாசமும் அடங்கி நிற்கும். சரீரத்தினுக் கெவ்வித வுணர்ச்சியு மிராது. இதுவே யோகிகளின் தரிசனாவத்தை. இதனையே பாவச நிலையென்பர். இந்நிலைக்கு வந்தவன் மாயையின் அடிமைத்திறத்தினின்றும் நீங்குகின்றான். அவனுக்கு எல்லா உலக இரகசியங்களும் கண்முன் தோன்றும். சிலர்க்கு யாங் கூறுவது பயித்தியம் எனவுந்தோன்றும். எம்மை நிந்திக்கவும் புகுவர் - அவருக்கும் இவ்வானந்த நிலை வந்தெய்துக. அவரும் நன்மை யடைவாராக.

எனக்கூறி யமைந்தார், நம் வள்ளலாரும்.

(தொடரும்)

காரைக்கால் அ. நாராயணன்.

உ

நன்றிகூறல்.

இறைவன் திருவருளை முன்னிட்டு தமிழ்மொழியினுடையவும் தமிழ்நாட்டினுடையவும் முன்னேற்றத்தைக் கருதி, யாம் பல வேறு சோதனைக்குட்பட்டுத்தொடங்கிய "தமிழர்" வெளியீட்டின் முதல் மலரின் 12- இதழ்களும் இனிது வெளியாகி அன்பர்களுடைய உளத்தை யெல்லாம் மகிழும்படி செய்ததற்காக எல்லாம் வல்ல இறைவன் இணையடித்தாமரைகளை இறைஞ்சுகின்றோம். இதற்கு அன்புடன் கட்டுரையளித்து உதவிய பெரியார்களுக்கும் அன்பர்களுக்கும் எம்முடைய எழுமையும் மறவாத வணக்கத்தைச் செலுத்துகின்றோம். இதைப்பல்லாற்றானும் போற்றி யாதரித்த பெரியோர்களுக்கும் அன்பர்களுக்கும் எமது மனமுவந்த நன்றியைச்செலுத்துகின்றோம் இதனை உவப்புடன் ஏற்று ஆதரித்த சந்தா நேயர்களுக்கெல்லாம் யாம் என்றென்றும் மறவாத நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம். எம்முடைய மனங்கோணாது இதைமிக்க அன்புடன் அச்சிட்டு உதவிய சோல்டன் கம்பனி அச்சுக்கூடம் உரிமையாளர் திரு. தி, பாலசுந்தரமுதலியார் அவர்களுக்கும், ஜனனுகூலன் அச்சுக்கூடம் உரிமையாளர் திரு, தி. கோ. இராஜகோபால்நாயுடு அவர்களுக்கும் எமது அன்பு நிறைந்த வணக்கத்தை யளிக்கின்றோம். இந்தத் தாள் வெளியீட்டினால் இதுகாறும் யாம் எமது கைப்பொருளைச் செலவழித்து யாதும் பலன் அடையாமற்போனபோதிலும், யாம் எடுத்துக்கொண்ட இந்த அருமையான பணி ஒருவாறு ஒருஆண்டு முற்றுப்பெற இந்தப்பெரியார்களும் அன்பர்களும் எமக்கு உடன் இருந்து ஊக்கத்தைக்கொடுத்து கைம்மாறு கவாமற்செய்த உதவியை யாம் என்றென்றும் மறக்கற்பாலதன்று. அன்பர்களெல்லோரும் இந்த ஆண்டிலே உடன் இருந்து உழைத்தும், உதவியும், ஊக்கியும் அருளியதுபோல அடுத்துவரும் ஆண்டிலும் உதவிசெய்ய ஒரு சிறிதும் தாழ்க்கமாட்டார்கள் என நம்பியே அடுத்த ஆண்டிலே யாம் வெளியிட விருக்கும் "தமிழர்" இதழ்களைத்தொடங்க எண்ணியுள்ளோம். இந்த முயற்சி நீளநிலைத்து நடைபெற பல்லாயிரக்கணக்கான சந்தா நேயர்கள் சேர்ந்தாலன்றி எமது தமிழ் அன்னைக்கு யாம் ஆற்றவிருக்கும் கடப்பாடு முற்றுப்பெறாததாகும். இதுகாறும் எமக்கு உதவியருளியதைப் போல், அடுத்த ஆண்டிலும் எமக்கு ஊக்கத்தைக்கொடுத்து உதவி செய்யும்படி இவர்கள் எல்லோரையும் பன் முறையும் இறைஞ்சி வேண்டுகின்றோம்.

தமிழ்ச் சர்வ கலாசாலை.

தமிழ்நாட்டிற்கு எனத்தனியாக ஒரு தமிழ்ச் சர்வகலாசாலை வேண்டுமென சில தமிழ் அன்பர்களான திருவாளர் மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை

பி.ஏ, எல்.டி. யவர்களும், தமிழர்தாள் ஆளர் திரு ம.உ.க. பஞ்சரத்தினம் பிள்ளையவர்களும் பிறரும் செய்த ஓர் பெருங்கிளர்ச்சியின் பயனாக உதவிச் சம்பளம் பெற்ற ஹைகோர்ட்டு நியாயதிபதியான திரு, தி. வே. சேஷகிரி ஐய்யர் அவர்கள் சென்னை செனேட் சபையில் தமிழ்ச் சர்வகலாசாலை ஒன்று தமிழ் நாட்டிற்கு இன்றியமையாது வேண்டப்படுவது யெனவும் அதற்கு வேண்டிய முயற்சி சென்னை அரசாட்சியாளர் எடுத்துக்கொள்ள வேண்டும் எனவும் ஓர் முடிபு கொண்டுவந்தார். அதைச் செனேட் சபையார் ஒரே மனதாக ஏற்றுக்கொண்டு சென்னை அரசாங்கத்திற்கு அனுப்பினார்கள். சென்னை அரசாங்கத்தார் இதன் விவரம் அடங்கிய முடிபுகளை தீரயோசித்து அனுப்பவேண்டுமென்றும் மறுபடியும் செனேட் சபையின் ஆலோசனைக்கு அனுப்பினார்கள். அப்போது தமிழ் நாட்டின் தவக்குறையினால் திரு.தி. வே. சேஷகிரி ஐய்யர் அவர்கள் காலஞ்சென்று விட்டபடியால் தக்கபடி அதனை ஆதரித்துப்பேசும் பெரியவர்கள் இல்லாமற்போகவே, செனேட் உறுப்பினர் ஒவ்வொருவரும் தம்மனம் போனபடியெல்லாம் பேசி செனேட் சபையின் காலத்தை வீணாக்கி யாதொரு முடிவும் கட்டாமல் இந்த முடிபைப்பற்றித் தீரயோசிக்காமல் நழுவவிடலானார்கள். இந்த செய்கை முற்றிலும் தவறுடைத்து என்றும், செனேட் சபை தன்னுடைய முக்கிய கடமையினின்றும் தவறிவிட்டதென்றும் சென்னையிலிருந்து வெளியாகும் எல்லா பத்திரிகைகளிலும் கூக்குரலிட்டன. இதனை யொட்டியே, திரிசிரபுரத்தில் பொதுமன்றத்தில் 1926-ம் ஆண்டு மார்ச்சு 29-ம் நாள் திருச்சிராப்பள்ளி ஜில்லா போர்டு தலைவர் திரு. சர். தி. தேசிகாசாரியர் அவர்கள் அவைத்தலைமையில் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் கிளைச்சங்கத்தாராலும், திரிசிரபுரம் தமிழ்ச்சங்கத்தாராலும், ஓர் பேரவைகூட்டி சில முக்கிய முடிபுகள் நிறைவேற்றினார்கள். அவைகளில் திரு, தி. வே. சேஷகிரி ஐய்யர் இறந்துபோனதற்கு தங்கள் துயரம் அன்னார் குடும்பத்திற்கு தெரிவித்துக் கொள்ளுவதாகவும், செனேட் சபையார் செய்த செய்கைக்கு பெரிதும் வருந்துவதாகவும், சென்னை அரசாங்கத்தார் இந்தமுயற்சியை உடனே எடுத்துக் கொண்டு ஆந்திர சர்வகலாசாலை நிறுவுவதற்கு முன்னர் ஓர் விசாரணைக் கழகம் நியமித்ததைப்போல் தமிழ்ச்சர்வகலாசாலைக்கும் ஒரு கழகம் நியமிக்கவேண்டுமென்றும், சில முக்கிய முடிபுகள் நிறைவேற்றி சென்னை அரசியலாருக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பினார்கள். அந்த முடிபுகளைப் பற்றிப் பேசியவர்கள் திரு, மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை, பி.ஏ. எல் டி. யவர்களும், திரு. பி. தி. ஸ்ரீனிவாசய்யங்கார் எம். ஏ. எல். டி. அவர்களும் ரெவரெண்டு பாதிரியார் பி. கார்டி துரை எம். ஏ. அவர்களும், திரு, பி. ஏ கணேசய்யர் பி. ஏ. எல் டி. அவர்களும், திரு. தி. பொ. வேதாசலம் பிள்ளை பி.ஏ. பி.எல், அவர்களும், திரிசிரபுரம் தமிழர் தாள் ஆளர் திரு. ம. உ. க. பஞ்சரத்தினம்பிள்ளை யவர்களும், திரு. சர். தி. தேசிகாசாரியார் அவர்களும் ஆவார்கள். இவர்கள் செய்த கிளர்ச்சியின் பயனாக சென்னை அரசாங்கத்தார் ஓர் விசாரணைக் கழகம் நியமித்துள்ளார்கள் எனக் கேட்டு மகிழ்ச்சி யடைகின்றோம்.

செய்திக்கோத்து.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாள்:

திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உள்ள துறையூர் என்னும் ஊரில் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் மடத்தில் சேலம் ஜில்லா ஜலகண்டபுரத்தில் உள்ள பேரறிவாளரான திரு. அ. வரத நஞ்சையபிள்ளை யவர்கள் அவைத்தலைமை வகிக்க, திரிசிரபுரம் தமிழர் பத்திராதிபர் திரு. ம. உ. க. பஞ்சரத்தினம் பிள்ளையவர்கள் "சிறு தெய்வங்களும் உயிர்ப்பலியின் தீமையும்," என்பது பொருளாக முதல் நாளிலும், இரண்டாவது நாளில் "அப்பூதியடிகள் பெருமை" என்பது பொருளாகவும் சில விரிவுரைகள் நிகழ்த்தவும், அவைத்தலைவர்கள் "சைவசமயத்தின் மாண்பு," என்பதைப்பற்றியும். "சீர்காழிப்பிள்ளையாரவர்களின் அருட்திறமை" என்பது பொருளாகவும், சில அரிய விரிவுரைகள் நிகழ்த்த, திருமறைக் காட்டிலிருந்து வந்த தேவாரத் திருக்கூட்டத்தார் தமிழ் மறையை இன்னிசையுடன் ஓதவும் மிகச்சிறப்பாக நடை பெற்றது; அடியார்களுக்கு மிக்க அன்புடன் அமுதும் அளிக்கப்பெற்றது. தேவாரத் திருக்கூட்டத்தார் இன்னிசையுடன் தமிழ் மறை யோத, மேளவாத்தியத்துடன் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருவுருவப்படம் அவ்வூர் தெருக்களில் திருவுலா வந்த காட்சி மிகவும் சிறப்பாக இருந்தது.

முற்காலத்திய விக்கிரகங்களின் அற்புத தரிசனம்.

தஞ்சைஜில்லாவைச்சேர்ந்த குத்தாளம் ஸ்டேஷனுக்கு அருகாமையில் காட்டூர் என்னும் ஓர் கிராமம் உண்டு. ஸ்ரீவஜ்ஜிர ஸ்தம்பீஸ்வரர் தேவாலயம் இருக்கிறது. அந்த கோவிலுக்குச்சொந்தமான நிலத்தில் சேணியர் வகுப்பைச்சேர்ந்த ஒருவர் ஒரு கூரை வீட்டில் வசித்துவந்தார். வீட்டின் சுவரை சீர்படுத்த வீட்டின் பின்புறத்தில் மண் வெட்டினார். சுமார் மூன்றடி ஆழம் வெட்டினதும், சேர்ந்தாப்போல் எண்பது விக்கிரகங்களை கண்டு அவற்றை எடுத்து சுத்தம் செய்தார். அவற்றில் சில சுவாமி விக்கிரகங்களாகவும் மற்றும் சில அம்மன் விக்கிரகங்களாகவும் இருக்கக் கண்டார். அவற்றுள் விநாயகருடைய விக்கிரகமும். தில்லைகாவலராகிய நடராஜப்பெருமானின் விக்கிரகம் திருவாசியுடனும் இருக்கின்றன.

முன் காலத்தில் ஷை விக்கிரகங்களை மறைக்க வேணுமென்றே புதைத்திருப்பதாக ஊகிக்கவேண்டியிருக்கிறது. ஏனெனில், விக்கிரகங்கள்யாவும் வெகு ஜாக்கிரதையுடன் ஒன்று சேர்த்து வைக்கப்பட்டிருந்தன. உறுப்புப் பழுதுகள் யாதொன்றும் காணப்படவில்லை. இதுவிஷயம் ஜில்லா கலெக்டர் அவர்களுக்கும் அறிவித்திருக்கிறதாம். ஏனைய ஜனங்கள் ஷை விக்கிரகத்தை தரிசிப்பதற்காக கூட்டங் கூட்டமாகச் செல்லுகின்றார்களாம். விக்கிரகங்களின் அமைப்பிலிருந்து இன்னும் அவைகளைச்சேர்ந்த சில விக்கிரகங்கள் சுற்றுப் பக்கங்களில் புதைந்திருக்க வேணுமென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது.

[illegible]

பரிதி வானவன் போற்றிப் பரவல்.

அகவற்பா.

போற்றுதும் ஞாயிறை! போற்றுதும் ஞாயிறை!
உலகம் வழுத்த உயிர்கள் தளிர்க்க
குணகடற் பிறந்து குடகடன் மூழ்கி
உலகை வலம்வரும் ஒள்ளொளிக் கதிரின்
ஞாயிறைப் போற்றுதும்! ஞாயிறைப் போற்றுதும்!
காண விறைவன் கணக்கில் நுட்பங்
காட்டு பேரொளிக் கதிரினைப் போற்றுதும்
உலகந் தோன்ற உயிர்கள் தோன்ற
அலகில் சராசரம் அனைத்துந் தோன்ற
இலகி நிற்க இன்பின் வளர
இன்பந் துய்க்க எல்லாம் அறிய
வந்த கதிரை வணங்கிப் போற்றுதும்!
மழையைத் தந்து மகிழ்ச்சியைப் பெருக்கும்
பரிதியைப் போற்றுதும்! பரிதியைப் போற்றுதும்!
கண்ணொளி காட்டிக் காரிருள் நீக்கித்
தண்ணளி செய்யுந் தகுபெருங் கருணை
வெய்யோன் றன்னை விரும்பிப் போற்றுதும்!
நோயை யோட்டு நுண்மருந் தாகியும்
நேய மூலிகை நிறைய விளையவும்
நல்லருள் புரியும் ஞாயிறைப் போற்றுதும்!
மாலுக் கிருக்கையாம் மாண்சுடர்ப் போற்றுதும்!
சங்கரன் வலக்கணுச் சாருங் கதிரைப்
போற்றுதும் பெரிதே! போற்றுதும் பெரிதே!
இனனை யன்றி இறைவே றுளதோ
என்ன மறைகள் இயம்பும் பெற்றி
வன்னக் கதிரை மனத்து வழுத்திப்
பன்னிப் போற்றுதும்! பணிந்து போற்றுதும்!
பன்னிரு திங்களும் பரவ வொவ்வோர்
இடத்தி னுறைந்தே இன்ப நிறமும்
பற்பல வாகப் பாங்கிற் காட்டித்
தன்னருங் கதிராற் றன்புகு மிடமெலாம்
தூய்மை யாக்கித் தோன்று பெயரும்
பன்னிரண் டாகிப் பாரினில் யாரும்
கண்காண் தேவெனக் கனிந்து போற்றும்
பரிதி வானவன் பைந்தாண் மலரைப்
பரவுதும் போற்றி! பரவுதும் போற்றியே!

வெண்பா.

எண்ணும் உலகுக்கோர் இன்றியமை யாப்பொருளாய
நண்ணும் ஒளியாய் நவிலுயிராய்த்—தண்ணளியின்
தேவாய் விளங்குஞ் செழுங்கதிரோன் றாண்மலரை
நாவாய் துதிக்க நயந்து.

அ. சுந்தரநாதன்

சென்ற "தமிழர்", மலர் 1—(10, 11) இதழ்களில் வெளி வந்த வினாக்களுக்கு அதில் காட்டிய விதிகளுக்குட்பட்டு தக்கபடி எழுதிய 15 பேருள்ள சீட்டுகளில் குலுக்கிப்போட்டு முதன்மை யாக வந்தவர்களுடைய பெயர்களும், விலாசங்களும்:—

3-வது பரிசில். ப. பரமசிவம் பிள்ளை,
கீரனூர் (போஸ்டு),
புதுக்கோட்டை (வழி).

4-வது பரிசில். க. சிவஞானம் பிள்ளை,
பெரியக்கடைவீதி,
கோயமுத்தூர்.

4-வது விடை

அ	னு	லோ	ம	ன்	■	தி	ரி	ச	ங்	கு
ங்	■	ப	ண்	■	அ	■	பு	து	■	ண
க	ப	ம்	■	பூ	நா	ல்	■	ர்	தி	ச
த	ர	■	அ	■	ரு	■	இ	■	கு	ங்
ன்	■	அ	ங்	து	■	கு	ங்	தா	■	தி
■	அ	ஸ்	தி	ர	சா	ஸ்	தி	ர	ம்	■
தே	■	ட	ப்	பி	■	தி	ர	ம்	■	அ
ச்	தி	■	பூ	■	சா	■	ன்	■	கே	ண்
ப	ரு	தி	■	ச	ற்	று	■	ப	ட்	ட
ங்	■	ரு	து	■	று	■	க	தி	■	ச
து	ம்	பை	மா	லை	■	ம	லை	யா	ள	ம்

குறிப்பு:—விடையுடன் ஒரு அணா தபால் தலை அனுப்பாதவர்களுடைய விடை கவனிக்கப்படமாட்டாது.

3-வது விடை:

பு	✿	கு	ண	செ	ல்	வி	✿	மை
✿	க	டி	✿	ங்	✿	ரூ	பை	✿
க	ர	சை	✿	தா	✿	பி	ர	ஞு
ங	✿	✿	க	ம	ப	✿	✿	டு
கா	ய	ச்	சி	ரை	க்	க	ல	ம்
ந	✿	✿	ரு	த்	தி	✿	✿	ம
தி	யா	கி	✿	த	✿	ஆ	வ	ணி
✿	தி	ரு	✿	லை	✿	ம	ண்	✿
மா	✿	பை	ர	வி	தோ	டி	✿	தை

1928 ஆண்டு முதல் ஆண்டு ஒன்றுக்கு **13** மாத மாக்க உத்தேசமாம்

ஆண்டு ஒன்றுக்கு பதின்மூன்று மாசமாக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது:- ஒவ்வொருமாதமும் 28 நாளுடையதாயிருக்கவேண்டுமாம். இம்மாதிரியாக 28 × 13 = 364-ம் போக 365-ஆம் நாள் வருஷவிடுமுறை நாளாகக் கருதப்பட வேண்டும். பதின் மூன்ருவது மாதம் ஜூனுக்கும் ஜூலைக்கும் மத்தியில் சேர்க்கப்படுமாம். ஒவ்வொரு மாதமும் ஞாயிற்றுக்கிழமையில் பிறக்கவேண்டுமாம். மாதம் 28 நாளாயிருக்கிறபடியாலும் முதல் மாதம் ஞாயிற்றுக்கிழமையில் பிறப்பதாலும் எல்லா மாதமும் ஞாயிற்றுகிழமையிலேயே பிறப்பதற்கு ஏதுவாயிருக்கிறது, கணக்கு முதலானது பார்க்கவும், குறிப்பாக இன்ன தேதி, இன்ன கிழமை யென்று கண்டு பிடிப்பதற்கும் இது மிகவும் சுலபமாகவேயிருக்கும். 1928, ஜனவரி, ஞாயிற்றுக்கிழமையில் பிறப்பதால் அதுவே இம்மாதிரி பஞ்சாங்கம் கணிப்பதற்கு ஏற்றதாகவுமிருக்கிறது. இந்த உத்தேசமானது (Cotsworth) என்பவருடையது. (Professor Marvin) என்பவரால் ஆதரிக்கப்பட்டது. இன்னும் தட்ப, வெட்பசங்கத் தலைவர் ஏனையோர்களும் இவ்வழியை ஒப்புக்கொண்டிருக்கிருர்களாம். இம்மாதிரியும் இன்னும் மற்ற பஞ்சாங்க மாறுதல்கள் செய்வதற்காக எல்லா நாட்டாரின் கூட்டு ஆலோசனைச்சங்கம் கூடிய சீக்கிரம் கூடப்போகிறதாகவும் ஆங்கில இந்த பத்திரிகைகள் கூறுகின்றன.

இனாம்! ஒரு பவுன்!! இனாம்!!!

இதன் கீழ் குறிப்பிட்டிருக்கும் விடுகதை சதுரத்தை எவராவது அடுத்த பக்கத்திலுள்ள விதிகளை சரியானபடி கவனித்து நிறைவு செய்து, ஒரு அணா தபால் தலையுடன் எமக்கு அனுப்புவார்களாகில், அந்த விதமாகப் பெற்ற சரியான விடைகளுக்குள்ள பெயரைக் குறிப்பிட்டுள்ள சீட்டுகளைக் குலுக்கிப்போட்டு முதலில் எடுக்கும் பேருள்ள விலாசத்திற்கு நமது "தமிழர்" ஒரு ஆண்டுப் பத்திரிகைகளை இலவசமாக அனுப்புவோம். ஒரு ஆண்டு இறுதியில் வந்த 12 பெயருள்ள சீட்டுகளைக் குலுக்கிப் போட்டு முதலில் எடுத்த பேருக்கு ஒரு பவுன் இனாமாக அளிக்கப்பெறும்.

விடை இந்த சதுரத்திலேயே எழுதி இந்த பக்கத்தை கத்திரித்து, அமைச்சர் "தமிழர் நிலையம்", 25, மலைவாசல், தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி, என்ற விலாசத்திற்கு அனுப்பவேண்டும்.

❀	1	2	3	❀	4	5		❀
6	❀	7		8			❀	9
10	11	❀	12			❀	13	
14		15	❀		❀	16		
❀	17			❀	18			❀
19			❀	20	❀	21		22
23		❀	24		25	❀	26	
	❀	27				28	❀	
❀	29			❀	30			❀

ஐயா, தாங்கள் கூறும் முடிபே கடைசி முடிபு என்றும், சட்டப்படி செல்லக்கூடிய தென்றும் ஒப்புக்கொள்ளுகிறேம்.

கையெழுத்து..

முழு பெயர்..

முழு விலாசம்..

விதிகள்.

ஒவ்வொரு வெள்ளை சதுரத்திற்கும் ஒரு எழுத்துப்போடவேண்டும். கணக்கிட்ட சதுரங்களிலிருந்து சொற்கள் ஆரம்பிக்கும். இடமிருந்து வலமாவது, மேலிருந்து கீழாவது சென்று பூக்களிட்டச் சதுரத்தில் சொற்கள் முடிவுபெறும். இந்த விதிகளைச் சிறிதும் தவறாமல் கவனித்து எழுதியனுப்பாத விடைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

முன்பக்கம் குறிப்பிட்டிருக்கும் இடத்திலேயே விடையும் விலாசமும் எழுதியனுப்பவேண்டும். வேறு காகிதத்தில் எழுதினால்ஒப்புக்கொள்ள முடியாது. அட்சய, ஆனி 19-ஆம் நாளுக்குள் ஒரு அணு தபால் தலையுடன் எமக்கு கிடைக்கப் பெறுகிற விடைகளை மட்டும்தான் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இது சம்பந்தமாக வரும் யாதொரு கடிதப் போக்கிற்கும் பதிலளிக்க முடியாது. ஒரு முறை பரிசு பெற்றவர்கள் அந்த ஆண்டிலே மறுபடியும் கலக்கக்கூடாது.

நேரான வழிகள்.

இடமிருந்து வலம்.

1. விஷ்ணு
4. பக்குவம்
7. முப்புரம்
10. ஐயிரண்டு
12. ஓர் கழிச்சல் நோய்
13. பூமி
14. உபாயம்
16. கர்கடக விராசி
17. மந்திர முடிவிலொன்று
18. பலசாலி
19. வருத்தம்
21. முக்தி
23. மன்மதன் தேவி
24. சமீபம்
26. யதுவினது நான்காம் மகன்
27. இருபத்தொன்பதாவதாண்டு
29. பண்டசாலை
30. கற்றுக்கொடு (தலைகீழ்)

மேலிருந்து கீழ்.

2. கொழுநன்
3. சூயவன் சக்கிரம்
4. ஆயிரம் யானைகொன்ற தலைவனைப்பாடும் பிரபந்தம்
5. சாரியை யிடைச்சொல்
6. செல்வம்
8. புராண நிலையினிற்போன்
9. நூற்பந்து
11. பிரமன்தேவி
15. கூட்டம்
16. தோழன்
20. இலவங்க மரம்
22. பூமி
24. எழில்
25. மரக்கொம்பு
27. கூப்பிடு
28. யாழினரம்பு

திருச்சிற்றம்பலம்

உ

" தமிழர் "

(ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு)

குரோதன, சித்திரை (1925 ஏப்ரல்) முதல் வெளிவருவது.

நோக்கங்கள்.— (1) தமிழ் மக்கள் எல்லோருடைய ஒற்றுமைக்காக உழைத்தல். (2) தமிழ் நாட்டிலுள்ள நிலவுரிமையாளர்கள், வணிகர்கள், மன்னர்கள், குரவர்கள், மாணவர்கள், தொழிலாளர்கள், மருத்துவர்கள், பெண்மக்கள், குழந்தைகள், உயர்ந்தோர், தாழ்ந்தோர் அனைவரும் முன்னேற்றமடைதல், (2) சமரச சமய உண்மைகளைப் பரவச்செய்தல். (4) எல்லா இயக்கத்தாருக்கும் பொதுவான அரசியல் துறைகளை விளக்குதல். (5) தமிழ்மொழி வளர்த்தல். (6) உலகநிகழ்ச்சி கூறல். (7) நூலாராய்ச்சி செய்தல். (8) பல துறைகளில் அறிவு வளர்ச்சிக்கான புதிய நூல்களை வெளியிடுதல். (9) புகைவண்டியில் செல்லுபவர்களின் துன்பம் நீக்க முயலல். (10) கைத்தொழில் (11) விடுகதை (1-பவுன் இனம்) விளம்பரம், பிறவுமாம்.

புரவலர்கள்:—

1. உயர்திரு சர். தி. செ. சிவஞானம்பிள்ளை, Kt. பி. ஏ. எம். எல். சி
சென்னை மாகாண வளர்ச்சித்துறை தமிழ் அமைச்சர்.
2. ,, சர். டி. தேசிகாசாரியார் அவர்கள், Kt. பி. ஏ. பி, எல்,
திருச்சிராப்பள்ளி ஜில்லாபோர்டு தலைவர்.

போற்றிப் புகழ்ந்த தமிழ் நாட்டுப் பத்திரிகைகள்.— (1) நவசக்தி (2) தமிழ்நாடு (3) லோகோபகாரி (4) திராவிடன் (5) தமிழ் சுயராஜ்யா (6) ஞானசாகரம், பல்லாவரம் (7) இலட்சுமி (8) தாருல் இஸ்லாம் (9) செந்தமிழ்ச்செல்வி, சென்னை, (10) செந்தமிழ், மதுரை (11) ஊழியன், காரைக்குடி (12) வேளாள மித்திரன், திருவனந்தபுரம் (13) நவ இந்தியா, திருவாரூர் (14) பாரத மித்திரன், கும்பகோணம் (15) தமிழ்ப்பொழில், தஞ்சை (16) தேச ஊழியன், புதுக்கோட்டை (17) ஸ்ரீபுநிதா, காரைக்கால் முதலியன.

புரவலர் காணிக்கை ரூ. 100.

ஆயுட்கால சந்தாரூ. 25.

போற்றி ஆதரிக்கும் பெரியார்கள்.— (1) மகா சந்நிதானங்கள் துறவு நிலையில் உள்ள பெரியார்கள், (2) ஜமீன்தார்கள், (3) மிராசுதார்கள், (4) பெரிய அரசியல்துறை ஆட்சியாளர்கள் (5) காங்கிரசு தலைவர்கள் (6) தென்னிந்தியா நலவுரிமை கூட்டுறவு சங்கத்துப்பெரியார்கள், (7) ஜில்லாபோர்டு, தாலுகாபோர்டு, முனிசிபல் சபைத்தலைவர்கள் (8) ஜில்லா கலக்டர்கள், (9) ஜில்லா நியாயாதிபதிகள், 10 ஜில்லா அரசியல் கல்விப்பகுதி தலைவர்கள், (11) புலவர்கள், (12) கல்லூரித்தலைவர்கள் (13) சீரிய பெண்மணிகள், (14) சுகாதாரப்பகுதி ஆட்சியாளர்கள், (15) உழவுப்பகுதியிலுள்ள ஆட்சியாளர்கள் (16) அரசியல்துறை மருத்துவ ஆட்சியாளர்கள் (17) பெரிய வழக்கறிஞர்களும் பிறரும் ஆவார்கள்.

ம. உ. க. பஞ்சரத்தினம்,
பதிப்பாளரும், தாள் ஆளரும்,
25, மலைவாசல் கடைவீதி,
தெப்பக்குளம், (போஸ்டு), திருச்சிகோட்டை,

இனாம்! ஒரு பவுன் !! இனாம்!!!

உ

"தமிழர்"

(ஓர் இனிய தனித்தமிழ் மாத வெளியீடு)

வேண்டுகோள்.

1. தமிழர்கள் எல்லோரும் தங்கள் முன்னேற்றத்தை விரும்பினால் இதற்கு உடனே சந்தாநேயராகச் சேருங்கள்!

2. அதிக வரும்படி சம்பாதிக்க வேண்டுமென்கிற எண்ணமிருந்தால் இதற்கு உடனே சந்தா நேயராகச் சேருங்கள்!

3, பல மாதச்சஞ்சிகைகளை வாங்கி அலுத்துப்போய், ஒரே சஞ்சிகையில் எல்லா விஷயங்களும் ஒருமிக்கப் பார்க்கவேண்டும் என்னும் எண்ணமிருந்தால் இதற்கு உடனே சந்தாநேயராகச் சேருங்கள்!

4. பிறரைக் குறைகூறுமல் ஆண்மக்கள், பெண்மக்கள், குழந்தைகள் ஆகிய எல்லாருடைய நலத்தையும் கருதக்கூடிய சஞ்சிகை ஒன்று வேண்டுமானால் அது "தமிழர்" சஞ்சிகையே.

5. தமிழ் நாட்டில் உழவினால் வாழக்கூடியவர்கள் 100-க்கு 70 பேருக்குமேல் ஆவர், ஆகவே, உழவின் வளர்ச்சியை நாடிவருவது "தமிழர்" சஞ்சிகையொன்றே

6. தமிழ்நாடு பிறநாடுகளைவிட வியாபாரத்தில் குறைவாகவே இருந்துவருகிறது. ஆகவே, வியாபாரம் வளரவேண்டுமானால் இந்த சஞ்சிகைக்குச் சந்தாநேயராக உடனே சேர வாருங்கள்.

7. தமிழ்வார்த்தை சதுர விடுகதை பரிசுகள்:—ஒரு பவுனும், 12 "தமிழர்" ஆண்டு சஞ்சிகைகளும் இனாமாக அளிக்கப்பெறும்.

முயற்சியுடையார் ஒவ்வொருவரும் மாதம் ரூபாய் 100-ம் அதற்கு மேலும் சம்பாதிக்கலாம். தமிழ்நாடு முழுதும் ஏஜண்டுகள் தேவை.

அறிவு, ஆற்றல், ஆராய்ச்சித்துறைகளில் சிறந்த அறிஞர்களால் எழுதப்பெற்ற பல்வேறு அருமையான கட்டுரைகளைக்கொண்டு தமிழர்களின் முன்னேற்றத்திற்கான பல்வேறு துறைகளையும் இச்சஞ்சிகையில் ஒருங்கே காணலாம். (டெமி ஆக்டவோ) பெரிய அளவில் 40 பக்கங்களுக்கு மேல் வெளிவருவது

இராயல் பதிப்பு:	ஒரு ஆண்டுக்கையோப்பம்.	ஆறுமாதகையோப்பம்.
உள்நாட்டிற்கு	ரூ. 2-8-0	... ரூ 1-8-0
வெளிநாட்டிற்கு	,, 3-0-0	... ,, 2-0-0
சாதாரண பதிப்பு	,, 2-0-0	... ,, 1-4-0
ஆயுட்கால சந்தா	... ரூ. 25-0-0	தனிச்சஞ்சிகை ரூ 0-4-0

5 ஆண்டு சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு ஒரு ஆண்டு சஞ்சிகைகள் இனாம். **10** ஆண்டு சந்தாதாரர்களைச் சேர்த்து முன் பணம் அனுப்புகிறவர்களுக்கு ரூ.5/-பெறுமானமுள்ள எமது தமிழ் விலைப் பட்டியலிற் கண்ட சாமான்கள் இனாம்.

அமைச்சர், "தமிழர் நிலையம்", தெப்பக்குளம், திருச்சிராப்பள்ளி.

Printed by T. K. Rajagopalan at the Jananukoola Press and Published by M. H. G. Pancharatnam, Editor, Teppakulam, Trichy.